செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௬, மாசி	பரல்
௨௯	மார்ச், 1955.	௭

பரிபாடல் மாநாடு

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பென ஆசிரியர் தொல்காப்பியனாரால் பாராட்டப்பெறும் நம் தமிழகத்தில் பண்டைக்காலம், கலையும் காட்சியும், ஆடலும் பாடலும், அன்பும் இன்பும் களிநடம் புரிந்தன. அவ்வுயரிய காலத்தில் தோன்றிய நூல்கள் பல. அவையிற்றுள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் தலைசிறந்தன

எட்டுத்தொகை நூலுள் ஒன்றாயது பரிபாடல் அது, அகம் புறம் ஆய இருவகைப் பொருள்களையும் அகத்தீடாகக் கொண்டு மிளிரும் நூலாகும். இதன்கண் திருமால், செவ்வேள் ஆய இறைவழிபாட்டுக் கூறுகளும், வையை யாற்றின் மாண் பெருவளனும், மாடமதுரையின் மாண்பும் கிளந்தெடுத் துரைப்பதாகும். இவைகளைக் கூறுமுகத்தான் நந்தமிழ்நாட்டின் ஆடவர் பெண்டிர் காதற் பண்பும், வீர மேம்பாடும், அறத்தின் திறமும், நாட்டின் இயற்கைக் காட்சிகளும், நீர் நில வளங்களும், பிறவும் கண்டின்புற தெளித்துரைக்கப்பட்டுள்ளன.

நாட்டின் எழுச்சி, கலையின் மேம்பாட்டால் நிலைபெறுவ தாம். அக்காலம் எல்லாக் கலைகளிலும் நாடு வீறுகொண்டு நின்றதால், நந்தமிழகம் எக்கழுத்தங்கொண்டு நின்றது. அதனை எடுத்துக்காட்டற்கு மாநாடுகள் கூட்டி விளக்கி யுரைத்துக் காட்டுதலே ஏற்ற கருவியாகும்.

இதனைக் குறிக்கோளாகக் கொண்டு சில்லாண்டுகளாகத் தொடங்கி அகநானூறு புறநானூறு முதலிய ஆறு இலக்கியச் சொற்பொழிவுகளும், அரசியலறிவு, தமிழக வரலாறு போன்ற

வரலாற்றுச் சொற்பொழிவுகளும் நூண்மாண் நுழைபுலஞ் சான்ற ஆசிரியப் பெருமக்களால் ஆற்றப்பெற்றுத் தொடர்பாக அவ்வப்பெயர்களால் நூலகள் அவ்வப்போது வெளிப்போந் துள்ளமை தமிழுலகமக்கள் யாவரும் நன்கறிந்தவொன்றும்.

அவ்வாறே இவ்வாண்டு பரிபாடற் சிறப்புப்பற்றி அறிஞர் பெருமக்களைச் சொற்பொழிவாற்றச் செய்து அவைகளைத் தொகுத்துத் தனிநூலாக்கி 'பரிபாடல் சொற்பொழிகள்' என்னும் பெயரால் தமிழகத்தில் நிலவ வெளியிட்டுள்ளோம்.

இப் பரிபாடல் மாநாடு தருமை அருள்பெறு நெல்லை அருணகிரி இசைக்கழகத்தின் ஒன்பதாம் தமிழ்த் திருவிழா நிகழ்ச்சியின்போது இராவ்சாகிபு திருவாளர் கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள் சீரிய தலைமையில் 27-2-'55 இல் நிகழ்வுற் றது. கழக ஆட்சிப்பொறுப்பாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை யவர்கள் யாவரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார்கள். அப்பால் இம் மாநாட்டைத் தொடங்கிவைத்த திரு தி. சுந்தரஞ் செட்டியார், பி. காம். அவர்கள், நம் தமிழ்மொழியின் சிறப்புக் குறித்து,

"உலக மொழிகளில் காலத்தால் முற்பட்டவை மிகச் சில. அவைகளில் இன்றளவும் பேச்சுவழக்கில் இருப்பன, சீன மொழியும் தமிழ்மொழியுமே யாகும்; நாம், நமது நாகரிகத் திலும், மொழியிலும் பழமையுடையோம் என்பதை யுணர்ந்து ஒவ்வொரு தமிழனும் பெருமிதம் கொள்ளவேண்டும்," என்று குறிப்பிட்டுவிட்டு, "பரிபாடல் என்பது அகப்பொருளும் புறப் பொருளும் பற்றிய நூலாகும்.........எட்டுத்தொகை நூல்களுள் பரிபாடல் பாண்டியர்க்குச் சிறப்பாக அமைந்திருக்கின்றது. பரிபாடலில் திருமாலைப்பற்றிய பாடல்களில் அப் பெருமா னுடைய பலவகை அவதாரங்கள் சிறப்பித்துப் பேசப்படு கின்றன. அன்பர் மனத்தில் கொண்டனவன்றி இறைவன் தனக்கென்று ஒரு வடிவமுடையவன் அல்லன் என்ற உண்மையை நான்காம்பாடல் விளக்குகின்றது. முருகப் பெருமான் சிவபெருமானின் திருமகன் என்பதும் அவனைப் பற்றிய புராணச்செய்திகள் பலவும் பரிபாடலில் குறிக்கப் பட்டுள்ளன. அப்பெருமானை வழிபட்ட மாசற்ற மனமுடைய பெரியோர்கள் அவனிடம் 'யாம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமுமல்ல, நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்று' என்று இவ்வாறு வேண்டும்தன்மை நம்மிடம் வளர்தல் வேண்டும்," என்று கூறி முடித்தார்.

திரு. கு. அருணாசலக் கவுண்டரவர்கள் தம் தலைமை யுரையில் பரிபாடல்கள் மொத்தம் எழுபது பாக்களில்

தற்போது இருபத்திரண்டுதான் கிடைத்திருக்கின்றதென்றும், முற்காலத்தில் இப் பரிபாடலைப் பண்ணோடு பாடினார்களென்றும், இன்று இதனுடைய பண் என்னவென்று தெரிந்து கொள்ளாத நிலையில் நாடு இருக்கிறதென்றும், பழந்தமிழ்மக்கள் சமய உணர்ச்சியில் திளைத்திருந்தவர்கள் என்ற உண்மையை பரிபாடல்களின் மூலம் அறியலாமென்றுங் கூறினார்.

பின்னர்ச் சொற்பொழிவு ஆசிரியர்கள், பரிபாடற் சொற்பொழிவுகளைத் தாம் தாம் எடுத்துக்கொண்ட நூலில் நுவன்ற பொருள்கள் குறித்து அரிய பேருரை நிகழ்த்தினர். திரு. ந. சேதுரகுநாதன் அவர்கள் முதலாவது திருமால் என்னும் பகுதியில் வந்துள்ள பரிபாடலின் அரிய நுண்கருத்துக்களைத் தாம் ஆய்ந்துகண்ட முறைமைப்படி தெள்ளத்தெளிய விளக்கிப் பேசினர். அப்பால் திரு. சா. கணபதி முதலியார் அவர்கள் செவ்வேள் என்னும் பகுதியில் வந்துள்ள பரிபாடற் பாட்டின் நயங்கெழுமிய பொருள்களை விளக்கி இன்புறப்பேசி முடித்தனர். பின்னர் திரு. அ. க. நவநீதகிருட்டிணன் அவர்கள் வையைப் பகுதியில் வந்துள்ள பரிபாடற் பாட்டின் சீர்மை நிரம்பிய கருத்துக்களை இனிமையுடன் கூறி அவையோரை மகிழ்வித்தனர். பிறகு திரு கு. பரமசிவன் அவர்கள் மதுரை யென்னும் பகுதிக்கண் அமைந்துள்ள மதுரை மாநகரின் சிறப்பியல்களையும் நகரமாந்தர் அறமுதலிய பண்புகளின் நலஞ்சான்ற பகுதிகளையும் பிற நூற்சான்றுகளுடன் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்ப் பேசி இன்பக்கடலாட்டினர். இரவு 9-30 மணிக்குமேல் இன்னிசை நிகழ்ச்சி, நாடக நிகழ்ச்சிகளைக் கழக அன்பர்கள் நிகழ்த்த, விழா இன்புடன் நிறைவேறியது.

தமிழகத்தில் தமிழ் இலக்கியச் செல்வங்கள் பெருகுதற்கு அரிய தொண்டாற்றுவோர், நெல்லை அருணகிரி இசைக் கழகத்தாராவர். அவர்கள் கடந்த ஆண்டுகளில் (4-2-52) இல் 'அரசியலறிவு' என்னும் சொற்பொழிவு நூலும், (23-1-54 முதல் 28-1-54), வரை மூன்றுநாட் சொற்பொழிகளில் ஒன்றாகத் 'தமிழக வரலாறு' என்னும் நூலும் வெளிவரத் துணைபுரிந்தனர். ஷை இசைக்கழகத்தார் அரிய தொண்டின் பெருமை பாராட்டுக்குரியது.

இன்னும் இன்னனபோன்ற இலக்கியங்களை நாடு நன்குணர்ந்து தெளிந்து பயன்பெற ஆண்டுகள்தோறும் சொற்பொழிவுகள் வாயிலாக அவைகளை வெளிக்கொணர எல்லாம் வல்ல முழுமுதல் ஒருவனான இறை சிவபெருமான் தண்ணருள் பெருகுவதாக.

சோமசுந்தர பாரதியாருக்குப் பாராட்டு

பண்டைக்கால நம் தமிழகத்தில் முடியுடை வேந்தர்கள் மூவரும், குறுநிலமன்னரும், வள்ளல்களும், தமிழ்ப்பெரும் புலவர்பெருமக்களைப் பாராட்டிச் சிறப்புச் செய்தனர். சான்ருகச் சோழமன்னன் கரிகாற்பெருவளத்தான் கடியலூர் உருத்திரங்கண்ணனாரைப் பெருமைப்படுத்தியதும், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் மாங்குடி மருதனார்பாற் பெருமதிப்பு வைத்து நடந்த வரலாறும், சேரமான் கணைக்காலிரும்பொறை யென்னும் சேரவேந்தன் மிக்க பேரன்புகொண்டு முரசுகட்டிலில் தூங்கிய மோசிகீரனாருக்குச் சிவிறிகொண்டு வீசிய வரலாறும் பிறவும் அக்காலம் மன்னர்கள் புலவர்களைப் பாராட்டி மேன்மைப்படுத்தியமைக்குச் சான்று தருவனவாம்.

தமிழகம் பண்டைப் பண்பாடு குன்றி வேற்றுநாட்டினர்க்குக் கீழ் அடிமையானபின் அரசர்களின்மையால் அப்பணியைக் குறுநில மன்னர்களிற் சிலரும் செல்வர்களும் கலைக்கழகங்களும் பட்டங்கள் பலவளித்துப் புலவர்களைப் பாராட்டுவவாயின.

அம்முறையில் நாவலர் திரு. ச. சோமசுந்தர பாரதியாரவர்கட்கு அண்ணாமலைப் பல்கலைக் கழக வெள்ளிவிழா 9-2-55-இல் நிகழ்ந்தபோது டாக்டர் என்னும் பட்டமளித்துப் பேரறிஞர்கள் பலர் வாழ்த்துதற்கிடையே பாராட்டியது. இப்பட்டம் பெற்றமைக்கு மகிழ்ந்து பாராட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்மன்றம், தமிழ் இலக்கியக் கழகம் ஆகியவற்றின் சார்பில் 28-2-'55 இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் இணைவேந்தர் இராசா சர். முத்தையச் செட்டியாரவர்கள் தலைமையில் கூட்டம் கூடியது. விழாவிற்கு மன்ற உறுப்பினர்களும், நீதிபதிகளும், புலவர் பெருமக்களும், மாணவ மாணவிகளும் பெருந்திரளாகக் குழுமியிருந்தனர். பேராசிரியர் திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியாரவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள்.

கடவுள் வாழ்த்துக்குப் பிறகு பல சங்கங்களின் சார்பில் முத்தையச் செட்டியா ரவர்கட்கும், **நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியா** ரவர்கட்கும் பல வாழ்த்துரைகள் படித்தளிக்கப் பெற்றன. பின்னர் முத்தையச் செட்டியாரவர்கள் விழாவுக்குத் தலைமைதாங்கித் திரு. பாரதியாரவர்களின் அரிய தமிழ்த்

தொண்டினையும், அவர்களின் ஆற்றலையும் பற்றிப் பெருமை பெறப் பாராட்டிப் பேசிச் சங்கங்களின் சார்பாகப் பொன்னாடை போர்த்துப் பெருமைப்படுத்தினார்கள்.

அப்பால் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, திரு. சு. இராமசாமி நாயுடு முதலியோர் நாவலர் டாக்டர் பாரதியாரின் தமிழ் ஆய்வுப் புல நலத்தையும், நாவீறுபடைத்த சொற்செல்வப் பண்பையும், பிற பண்புகளையும் பலபடப் பாராட்டிப் பேசினர். அதுகாலை விழாவுக்குக் குழுமியிருந்த மக்கள் பேராரவாரஞ் செய்து தம் மகிழ்வை வெளிப்படுத்தினர்.

பின்னர்ப் பாரதியாரவர்கள் தமக்குப் பொன்னாடை போர்த்துச் சிறப்புச் செய்தமை குறித்துப் பேசுங்கால், தமக்குச் செய்த சிறப்பு தமிழ்மொழியிடத்தில் தமிழகத்தவர் கொண்டுள்ள பேரன்பையே குறிப்பதாகுமென்றும், தமிழுக்கும் நாட்டுக்கும் தம்மால் இயன்றவரை உழைப்பதையே தம் கடமையாகக் கொண்டுள்ளதாகவும், தமிழ் ஆட்சிமொழியாகி எல்லாச் செயல்களும் தமிழிலேயே நடைபெறற்கான வழி வகைகளைக் காணவேண்டுமென்றும் தெள்ளத்தெளிய விளக்க முறக் கூறினர்.

அப்பால் வித்துவான் திரு. மு. அருணாசலம் அவர்கள் நன்றிகூறியபின் நாட்டு வாழ்த்துடன் விழா முடிவுற்றது.

பெரியோர் தூதுகள்

[நாஞ்சில், திரு. கா. கணபதி]

பண்டு சுந்தரர் பேரில் கொண்ட
மண்டு பேரன்பால் பரவை மனைக்கு
அண்டர் முதல்வன் இறைவ னாரும்
கொண்ட வினையை முடித்த தூதும்
எண்டிசை புகழும் பாண்டவர்க் காகக்
கொண்டல் வண்ணன் சென்ற தூதும்
மண்டல மக்கள் மாசுகள் அகல
இலண்டன் ஏகிய காந்தியின் தூதும்
விண்டலப் புகழில் விரிந்து கலந்து
தண்டமிழ்ப் புகழாய்த் தழைக்கு மன்றே.

விஞ்ஞானச் செல்வி

இராசேசுவரி அம்மையார் பிரிவு

அன்று பாரதியார் ஒரு காட்சியைக் கண்டு நடுநடுங்கினர்; 'புத்தம்புதிய கலைகள் மெத்த வளருது மேற்கே, சொல்லவும் கூடுவதில்லை அதைச் சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை' என்று ஓர் பேதை கூறிய புன்சொல்லுக்காக. அப் புதிய கலையே விஞ்ஞானமெனப் பெயரிய நுண்கலை. அக்கலையை எட்டுத்திக்குஞ் சென்று கொணருமாறு தன் மக்களைக் கூவித் தமிழ்த்தாய் வேண்டுவதாகப் பாரதியார் பகர்ந்தார்.

பாரதி நடுக்கங்கொண்ட விஞ்ஞானக் கலையை அணுவின் கதை முதலிய அரிய கட்டுரைகளால் எழுதித் தமிழில் கொணரமுடியும் என்று காட்டிவந்தவர், கலையரசி ஈ. த. இராசேசுவரியம்மையாரவர்கள்.

இவ்வம்மையாரவர்கள் 1-3-55-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை இரவு இறைவன் திருவடிப் பேறுற்றார். இவர்களின் பேரிழப்பு ஈடுசெய்யவொண்ணாததாகும். இவர்கள் கடந்த இருபான் ஆண்டுகளாகக் கல்வித்துறையில்—அதினும் தமிழ்த்துறைக்கு அரிய சீரிய தொண்டுகள் பல ஆற்றியுள்ளனர். இவர்கள் இராணிக்கல்லூரியில் விஞ்ஞானப்பேராசிரியராகத் தொண்டு புரிந்தாலும் தமிழ்இலக்கியச் சுவையில் பெரிதும் பேரார்வம் மிக்கவர்; அதில் சிறந்த ஆற்றலும் நுணுகிய அறிவும் வாய்ந்தவர்.

'சூரியன்' என்பது அம்மையாரவர்கள் எழுதிய முதல் விஞ்ஞான நூல். இந்த நூல் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பெற்றது. இது பி. ஏ. பயிலுதற்குப் பாடப்புத்தகமாகப் பலமுறை தென்னாட்டுப் பல்கலைக்கழகங்களில் வழங்கியது. 'பலூன்' என்பது விளையாட்டுச் சிறுவர் விளையாடுதற்குப் பயன்படும் உருண்டை. இதைக் குறித்து 'வானக் குமிழி' என்ற தலைப்பில் மூன்று பகுதிகளாக எழுதினார்கள். வானக்

கப்பல் (Airship, Aeroplane) என்பவற்றைப் பற்றி ஒரு நூல் வெளியிட்டார்கள். வானக்குமிழியும் பி. ஏ. பாடமாக அமைந்தது. ஆசிரியக் கல்லூரியில் இவர்கள் இருந்தபோது 'சூழவி யுள்ளம்' என்ற நூலெழுதி வெளியிட்டார்கள். இது சென்னை மாநில அரசியலார் பரிசும், சென்னைப் பல்கலைக்கழகத்தார் பரிசும் பெற்றது. 'ஐன்ஸ்டைன் கண்ட காட்சி' என்னும் அரிய நூல் இவர்களால் எழுதப்பெற்றது. 'பரமாணுப் புராணம்' என்பது இவர்கள் இயற்றிய மற்றொரு விஞ்ஞான நூல். இதில் அணுவின் ஆற்றலையும், அதனை அறிய வந்த மக்களின் வரலாற்றையும் விளக்குகின்றது. புராணம் போல் இதனை எளிமையில் உணர்த்துகின்றார். தருமபுர ஆதீனத்தார் இதனை வெளியிட்டு அம்மையாருக்கு விஞ்ஞானச்செல்வி என்ற பட்டமும் வழங்கியுள்ளனர். இந்நூலைப் பாராட்டி டாக்டர் கே. எஸ். கிருஃச்ணன் அவர்கள் முன்னுரை வழங்கியுள்ளனர். இன்னன போன்ற பல அரிய நூல்களை எழுதித் தமிழ்த்தாய்க்குப் புத்தணியாகப் புனைந்துள்ளனர்.

அம்மையார் சொல்லின் செல்வியாவர்; கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப எண்பொருளவாகச் செலச்சொல்லும் ஒண்மையராவர்.

அம்மையாரவர்கள் விஞ்ஞானக் கலையில் மேம்பட்டவராயினும், சமயத்துறையில்—அதினும் சிறந்த சைவசமயத்துறையில் உறைத்துநின்ற மேதகையோருமாவர். சைவசித்தாந்தத்தை நன்கு கற்றுத் தேறியவர்; அதில் ஆழ்ந்த கருத்துக்களை அவ்வப்போது வெளியிட்டுள்ளனர்; சைவசித்தாந்த மகா சமாசத்தில் அம்மையார் ஆற்றிய சொற்பொழிவுகளைப் பாராட்டாதார் இல்லை.

அம்மையார் சிந்தாதிரிப்பேட்டை நடுத்தரப்பள்ளிச் சங்கத்தின் துணைத்தலைவர்; சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றைத் திறம்பட நடத்த உதவியவர்; இவர்கள் பெண்மைக் குலத்துக்கு முதன்மணியாகத் திகழ்ந்தார்கள். சங்க காலப் பெண்மணிகள் போலக் கல்வியறிவோடு போராற்றல் படைத்த மேதகையோருமாவர். இவர், தம் இளம்பருவ காலத்தே மறைந்தது ஆற்றொணு வருத்தத்திற்குரிய வொன்றும்.

இவ் அம்மையாரவர்கள் தம் நாற்பத்தெட்டாம் அகவையில் இவ்வுலக வாழ்வை நீத்தகன்றார்கள். இவர்கள் பிரிவுகுறித்து மிக இரங்கி வருந்துகின்றோம். இவர்கள் நெடும் பிரிவுக்கு வருந்திப் புன்கணுறும் இவர்கள் உறவினர்க்கு எம் வருத்தத்தை ஒருமை மனமுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். அம்மையாரின் ஆருயிர், எல்லாம் வல்ல இறை தெண்ணிலா மலர்ந்த வேணியன் திருவடி இன்பிற்றிளைத்து இன்புறுவதாக.

அம்மையார் வாழ்க்கைக் குறிப்பு

1906-ஆம் ஆண்டு அக்டோபர்த்திங்கள் 18-ஆம் நாள் திரு. ஈ. ந. தணிகாசல முதலியாரவர்கட்கு இரண்டாவது புதல்வியாகப் பிறந்தார்.

முறையாகக் கல்வி பயின்று ஆங்கில மொழியில் எம். ஏ. பட்டம் பெற்றார்.

வெல்லிங்டன் பெருமாட்டி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் பி. டி. பட்டம் பெற்றார்.

1932-இல் மேரி அரசியார் கல்லூரியில் விஞ்ஞானத் துணைச் சொற்பொழிவாளராக அமர்ந்தார்.

1946-இல் வெல்லிங்டன் பெருமாட்டி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் விஞ்ஞானச் சொற்பொழிவாளராகச் சென்றார்.

1953-இல் மேரி அரசியார் கல்லூரியில் பௌதிகத் துறைத் தலைவராகப் பணிபுரிந்துவந்தார்.

1-3-1955-இல் மறைந்தார்.

இரங்கற்பா

கல்விக் கடலே சொல்லின் செல்வீ!
பல்கலை தேர்ந்த பண்புறும் அம்மே!
தமிழே கண்ணாய்த் தமிழே மூச்சாய்த்
தமிழே நினைவாய்த் தயங்கிய தாயே!
பெண்மையாம் உடற்குப் பிறங்கும் உயிரே!
எண்மையாய் அரும்பொருள் இசைக்கும் ஆற்றலோய்!
விஞ்ஞா னக்கலை வித்தே! தமிழ்நிலத்
திஞ்ஞான் றருஞ்செயல் இயற்றிய மணியே!
மாணவ ருலகும் மாண்புளோர் உலகும்
நீணெடுந் துன்புற நீத்திவ் வுலகைத்
தமிழைத் தணவாச் சைவவான் நெறியை
அமிழ்தென இனிக்கும் அருங்கலை வைப்பினை
எங்ஙனம் மறந்து சென்றீர் நீரே!
அங்குணம் படைத்த அன்புடை அன்னே!
இராசேசுவரி யெனும்பெயர் கொண்ட
பராவரும் புகழ்மிகு பண்புள அம்மையே!

—**செல்லூர்க்கிழார்.**

தமிழகத்தில் தமிழ்நிலை

[திரு. ஔவை, சு. துரைசாமிபிள்ளை]

இன்று நமது பாரதநாட்டில் மக்களாட்சி அமைதியுடன் நிலவுகிறது. நிலவுலக முழுதிலுமுள்ள நாடுகளை நோக்கின் பெரும்பான்மை மக்களாட்சியில் இருந்துதான் மாண்புறுகின்றன. அவ்வகையில் நமதுநாடு மக்களாட்சியால் சிறப்பெய்துவதில் வியப்பு இல்லை. மேலும் நாம் மேற்கொண்டிருக்கும் மக்களாட்சிமுறை உலகில் இல்லாத புதிய ஆட்சிமுறையும் அன்று.

நமதுநாடு நிலப்பரப்பாலும் மக்கள் தொகையாலும் நம்மைச் சூழவுள்ள நாடுகள் பலவற்றினும் பெரியது. முப்பது கோடிக்குமேல் நம்நாட்டில் மக்கள் வாழ்கின்றனர். அவர்களில் கற்றவர்தொகை நூற்றுக்குப் பத்துப்பேர்க்குமேல் இல்லையென்பது உண்மை இந்தப் பத்துப்பேரிலும் தாம் நினைத்ததைப் பிறர்க்கு எழுதிக்காட்டவோ தெளிவாகச் சொல்லவோ தெரிந்தவர் ஐந்துபேர்கூட இல்லை. மற்றைத் தொண்ணூற்றைந்துபேரும் நல்ல கல்வி யில்லாதவராகும். ஆனால், அவர்கள் அனைவரும் நம் மக்களாட்சியின் உறுப்பினர். கல்வியுடைய மிகச் சிலரே மக்கள் ஆட்சியின் செயல்வகைகளையும் விளையும் நன்மைகளையும் பகுத்துணரக்கூடிய நிலையில் உள்ளனர்; இவர்களே ஆட்சி யிருக்கையில்இருந்து ஆட்சி செய்கின்றனர். நூற்றுக்குத் தொண்ணூற்றைந்துபேர் அச்சிலரால் ஆளப்படுகின்றனர். இது பற்றியே கல்வியுடைய ஒருசிலரால் கல்லாத பெரும்பான்மையோரை ஆளுவது நம் நாட்டு இன்றைய மக்கள் ஆட்சியின் மாண்பாக இருக்கிறது என்ற குறையும் கூறப்படுகிறது.

நாட்டுமக்கள் அனைவரும் நாட்டு ஆட்சியின் உறுப்பினராக இருப்பதால் அவர்கள் அனைவரும் "நல்ல" கல்வியுடையவர்களாக இருத்தல்வேண்டும். அப்பொழுதுதான் மக்களது ஆட்சி அசைக்கமுடியாத பேராற்றலும் பெருவலியும் உடையதாய்ப் பெருமைபெற முடியும். அந்தக் காலம்தான் மக்கள் ஆட்சியின் பொற்காலமாகும். அந்தக்காலம் விரைவில் வரச்செய்வதே மக்களாட்சியின் குறிக்கோள். "பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும், கொல்குறும்பும் இல்லது நாடு" என்று திருவள்ளுவர் கூறுவர். கல்லாத மக்கள் பெருகியிருக்கும் நாட்டில் பல்குழுவும் உட்பகையும் கொல்குறும்பும் உண்டாதற்கு வாய்ப்புக்கள் உண்டு. கல்லாத மக்களை இக் குழுக்களின் கொள்கைகள் விரைவில் தமக்குத் துணையாக்கிக் கொள்

ளும். அதன் விளைவாக நாடு அமைதியிழந்து அல்லலுறும். அதனால் நாட்டுமக்கள் அனைவரையும் நல்ல கல்வியுடைய மக்களாக்குவது ஆட்சியின் குறிக்கோளாக இருக்கிறது. மக்கள் ஆட்சி சிறந்து விளங்குதற்கு அது பெரிய பாதுகாப்பும் வலியுமாகும்.

முப்பதுகோடி மக்களைக்கொண்ட நமது நாட்டில் முந்நூறுக்கு மேற்பட்ட மொழிகள் நிலவுகின்றன என்று மொழியறிஞர் கூறுகின்றனர். ஓராயிரம் ஈராயிரம் மக்கள் பேசும் மொழிகளை விலக்கினால் பல நூறாயிரக்கணக்கில் பேசுபவர்களைக்கொண்ட மொழிகள் மிகச் சிலவேயாகும். அவற்றைக் கொண்டே தமிழ்நாடு, ஆந்திரநாடு, கேரளநாடு, கன்னடநாடு, மராட்டியநாடு, குசராத்திநாடு எனப் பெயர்தாங்கிய உள்நாடுகள் பல நமது பாரதநாட்டில் உள்ளன. அவற்றில் வாழ்பவரும் முறையே தமிழர், ஆந்திரர், கேரளர், கன்னடர், மராட்டியர், குசராத்தியர் என்று குறிக்கப்படுகின்றனர். இந்த உண்ணாடுகள் நமது பாரதப் பெருநிலத்துக்கு உறுப்புக்கள். இந்த உறுப்புக்களின் அறிவுவன்மையால்தான் பாரதப் பேரரசு வன்மையுற்றுத் திகழவேண்டியிருக்கிறது. இவ் வுண்ணாடுகள் கல்வியால் வன்மை பெற்றாலன்றி நமது பாரதப் பேரரசுக்கு உய்தியில்லை என்பதை யாவரும் தெளிவாக வுணரவேண்டும். தமிழர், ஆந்திரர், கேரளர் எனப்படும் பலரும் தத்தம் பகுதியிலுள்ள மக்கள் நல்ல கல்வியுடையவராக வேண்டும் என்ற கருத்தும் அதனைச் செயற்படுத்துவதில் கண்ணாகவும் இருக்கும் கடமையுடையவராகின்றார்கள்.

மக்களாட்சி நிலவும் பிற நாடுகளிலும் இப்படிக் கல்லாதவர் பலரும் கற்றவர் சிலருமாகத்தான் மக்கள் வாழ்கின்றார்களோ என்று ஓர் ஐயம் உண்டாகலாம் இதனை ஆராய்ந்தால் அவ்வாறு இல்லை என்று கூறவேண்டும். கல்லாதவர் பெருகியிருந்த நாடுகள் சில, மக்கள் ஆட்சிமுறை பெற்ற சிறிதுகாலத்தில் கற்றவர் தொகையைப் பெருவாரியாகப் பெருக்கிவிட்டன. அந்த நாடுகளிலும் அமைதியான வாழ்க்கை இல்லாமையால் அந்த நிலையும் ஏற்பட்டதேயன்றி வேறில்லை. நமது பாரதநாட்டில் சென்ற இருநூறு ஆண்டுகட்கு மேலாக அமைதியான வாழ்க்கையே நிலவியிருந்தது. ஆயினும், மக்களிடையே கல்வியில்லாமை என்ற இருள் நன்றாகப் பரந்து மூடிக்கொண்டது. இதற்குக் காரணம் வேற்றுநாட்டவரின் ஆட்சி என்று கூறலாம். வேற்றவரான ஆங்கிலராட்சியில் அமைதி நிலவியது உண்மை; ஆனால். நல்ல கல்வியறிவு பெறுவதற்கேற்ற வாய்ப்புக்கள் குறைவாக இருந்தன. பெருக்கவேண்டும் என்ற எண்ணம் அரசியலார்க்கும்

இல்லை; கல்விபெற்றிருந்த சில பொதுமக்களுக்கும் தோன்றவில்லை. “தான்வாழ ஏனோர் தனக்கடிமை யாக எனும், ஊன அறிவே” அந்நாளில் ஓங்கியிருந்தது. வாழ்ந்தாரை வாழ்விக்கவும் வீழ்ந்தாரை மீளாவறுமையில் வீழ்விக்கவுமே அக்காலச் சூழ்நிலை இடம் தந்துகொண்டிருந்தது.

ஆங்கில ஆட்சியில்தானே கலாசாலைகள் பலவும் கல்லூரிகள் பலவும் தோன்றிக் கல்விப்பணி புரிந்தன; நாட்டுப் புறங்களிலும் நகரங்களிலும் மக்கட்குக் கல்வி தரப்படாமல் இல்லையே என்றொரு கேள்வி இங்கே எழும். கல்வி ஓரளவு தரப்பட்டதுண்டு; ஆயினும் அக்கல்வி நாட்டு மக்களிடையே பரவி அறிவு பெருகுதற்கேற்ற வகையில் நடைபெறவில்லை. நான் யார்? என்னைச் சூழவுள்ளவர் யார்? அவர்கட்கும் எனக்குமுள்ள தொடர்பு யாது? என் வாழ்வு அவர்கட்கும் இந்நாட்டுக்கும் எவ்வகைத் தொடர்பில் இயங்குகிறது? உலக மக்களிடையே என் நாட்டுமக்கள் எந்தநிலையில் உள்ளனர்? என்பனபோலும் அறிவை வளர்த்துப் பயன்பட வாழ்விக்கும் வகையில் அறிவு தோன்றவில்லை. கற்பவர் உள்ளத்தில் நல்லறிவு தோன்றி மக்கட்கு நலம்புரிதற்கேற்ற வளர்ச்சி யுண்டு பண்ணக்கூடிய மொழியில் கல்வி கற்பிக்கப்படவில்லை. ஆட்சி புரிந்த ஆங்கிலேயர் நாட்டில் தங்களது ஆட்சி அமைதியான முறையில் நடைபெறுவது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். அரசியல், நீதி, வாணிகம், போக்குவரவு முதலிய எல்லாத் துறைகளிலும் ஆங்கிலேயரே தலைமையேற்று நின்று, எல்லாச் செயல்முறைகளையும் தங்கள் ஆங்கிலமொழியிலேயே நடத்தினர். அவர்கட்குக் கீழேயிருந்து அவர்க்கு வேண்டியவற்றைச் செய்தற்கேற்ற எழுத்தாளர்களே அவர்கட்குத் தேவைப்பட்டனர். அவர்களை உண்டுபண்ணுவதே அவர்களது கல்விப்பணியின் கருத்தும் நோக்கமுமாக இருந்தன. மக்களின் எதிர்கால நல்வாழ்வு கருதி அவர்கள் வழங்கும் மொழியிலேயே கல்வியறிவு பெறுவிக்கக் கருதாது, தங்கள் நலமொன்றையே கருதித் தங்கட்கு என்றும் அரசியலடிமைகளாய் மக்களை மாற்றி அவர்கள் உள்ளத்தில் அவர்தம் நாடு மொழி கலை பண்பாடுகளை மறந்து ஆங்கில மாக்களாக்குவதே கல்வி நோக்கமாகக் கொண்டனர். அதனால், நாட்டுமொழிகளை மூலையில் ஒதுக்கித் தங்கள் ஆங்கிலமொழிக்கே முதலிடம் தந்து கல்வி தருவாராயினர்.

ஆங்கிலர் ஆட்சியில் வேறொரு சூழ்நிலை தோன்றுவதாயிற்று. வேறு வேறு மொழி வழங்கும் நாட்டுப் பகுதிகளைத் தங்கள் வசதிக்கேற்பச் சேர்த்து ஒருநாடாக்கி ஆட்சிபுரிய வேண்டிய சூழ்நிலை வந்தது. சென்னை மாநாட்டில் ஆந்திரர்,

கன்னடர், கேரளர், தமிழர் ஆகிய பலரும் ஒருங்கிருந்து ஆளப்படவேண்டியவ ராயினர். அவர்களிடையே மொழிப் பூசல் தோன்றி அமைதியைக் குலைக்காவண்ணம், அவர்கட்கு வேறான ஆங்கிலமொழியை அவர்களிடையே புகுத்தி நிலவவிட வேண்டியது இன்றியமையாததாயிற்று. ஆதலால், ஆங்கில மொழியால் அரசியல் நடக்கவேண்டிய நிலைமை உறுதிபெறுவதாயிற்று.

அரசியல் ஆட்சி வகையில் நம் நாட்டுமக்கள் அறியாமல் மறைமுகமாகச் சில செயல்முறைகளை ஆங்கிலமக்கள் மேற்கொண்டிருந்தனர். அவர்கள் நம்நாட்டுக்கு வந்ததே வாணிகஞ் செய்து ஊதியம் பெறுவதற்காக ஆதலால், ஆட்சி வகையிலும் ஊதியங்கண்டு, ஆளப்படும் மக்கட்குத் தெரியாமல் அதனைத் தங்கள் நாட்டுக்குக் கொண்டுசெல்லும் வழக்கமுடையரா யிருந்தனர். அதற்கேற்ற சூழ்ச்சிகளை மக்கள் தெரியாமல் தடுப்பதற்கு மக்களுக்கும் அரசியலுக்கும் இடையே ஆங்கிலமொழி ஓர் அழகிய இரும்புத் திரையாகப் பயன்பட்டது. இதனாலும் ஆங்கிலமொழியை நாட்டில் புகுத்துவது வேண்டிய தொன்றாயிற்று.

அமைதியாக வாழ்ந்த மக்கள் அரசியலுக்கும் தங்கட்கும் இடையே ஆங்கிலமொழி திரையாக இருப்பதை நீக்கி, தங்கள் மொழியில் ஆட்சி நடக்கவேண்டுமென்று கேட்கலாமே எனில், ஆங்கிலம் எல்லார்க்கும் பொதுவாக உளது என்ற கருத்து நாட்டவர்களில் ஒருசிலர்க்கு உண்டாயிற்று. பெரும்பாலோர் வேறுவகையில் பழகிவந்தவர்கள். ஆங்கிலர் ஆட்சி வருமுன் தமிழர், ஆந்திரர், கன்னடர் ஆகிய பலரும் வேந்தர் செய்யும் முடியாட்சியின்கீழ் வாழ்ந்து வந்தவர். வேந்தனிடத்தில் குறை வேண்டுதலும் முறை வேண்டுதலுமாகிய இரண்டுமே நாட்டுக் குடிமக்கள் செய்துகொள்வது வழக்கம். நாட்டாட்சியில் தங்கட்குப் பங்குண்டு என்பது அவர்கட்குத் தெரியாது. செய்துகொண்ட குறை நீங்குவதும், முறை பெறுவதுமே அவர்கட்கு வேண்டியன. அவை கிடைத்துவிடின், குடிமக்கள் அமைந்துவிடுவது வழக்கம். கல்வியுடையவர்கள் அரசியலில் ஏதாவதொரு சேவகம் பெற்று அதன் வாயிலாகப் பொருள்பெற்றுத் தம் வயிற்றைக் கழுவுவதே வாழ்வின் குறிக்கோளாகக் கருதினர். ஆங்கிலக்கல்வி பெற்றோருள் பெரும்பாலோர் வெள்ளைத்துரைக்கு மகிழ்ச்சி யுண்டுபண்ணி அவர் விரும்பிப் பாராட்டும் சிறந்த அடிமையாக வாழ்வதே உயிர்வாழ்க்கையின் ஊதியமாகக் கருதினர். (தொடரும்)

"பழுத்த புலமைப் பசும்பாவலர்"*

[பேராசிரியர் கா. பொ. இரத்தினம். எம்.ஏ. பி.ஓ.எல்.]

பண்டிதமணி நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து பேரா இயற்கைப் பெரும் பேறு எய்திய துன்பச் செய்தியினை அன்பர்கள் யாவரும் இது வரையில் அறிந்திருப்பார்கள்; ஆற்றொணுத் துயரில் மூழ்கியும் இருப்பார்கள். "தமிழ் தமிழ்" என உயிர்த்த புலவர் மணியை—'தமிழன்னைக்கு இன்னும் பல தொண்டுகள் செய்தற்காகவே உடல் நலம் பெற விரும்புகிறேன்' என்றுரைத்த பண்டிதமணியைப் பறிகொடுத்து விட்டோம்! பைந்தமிழ்ப் பாடல்களும், அமிழ்தனைய விரிவுரைகளும், ஆராய்ச்சிப் பேருரைகளும் நல்கித் தமிழ்த்தாயை வளம்படுத்திய செந்தமிழ்க்கொண்டல் மறைந்து விட்டது! என்னே! எம் தவக்குறைவு!

'இவ்வுலகிலே பொறுத்தற்கரிய துயர், பெரும் புலவனுடைய பிரிவுதான்' எனப் பாடிய திருவாய் இப்பொழுது ஓய்ந்து விட்டது! அப்பாட்டுத் தீட்டிக் காட்டிய பெருந்துயருக்கு நாம் ஆளாகித் தவிக்கின்றோம். தம் பாட்டுக்குத் தம்பிரிவினையே உதாரணமாக்கிவிட்டு அவர் போய் விட்டார். எமது உள்ளத்திலுள்ள துயருக்கு உருவங்கொடுக்கத் தக்கது அப்பாட்டின் ஒரு பகுதியே யாதலின் அதனை இப்பொழுது படிப்போம்.

"சேஎ யிழந்த தாயினும் சேய்தன்
தாஅ யிழந்த தகையினுங் கொழுநனை
இழந்த பெண்டினும், விழைந்த பெண்டினை
இழந்த கொழுநற்கு இயைபெருந் துன்பினும்
பூவலய மெல்லாம் பொதுவறப் புரக்குமொரு
காவலன் பிரிந்த காசினிக் கவல்வினும்
பாவலன் பிரிந்த பரிவுறு பிரிவே
ஆற்றற் கரிய அருந்துயர் என்ப............"

இதனை அவர் இருபது ஆண்டுகட்கு முன் எனது வேண்டுகோட் கிசைந்து பாடினார் இதனுடைய உண்மையினை இன்று யாம் அனுபவத்தில் அறிகிறோம். பிறந்தவர் இறத்தல் இவ்வுலக இயற்கையே எனினும் இவ்வளவு விரைவாக, அறுபத்தைந்தாண்டு வாழ்வுடன் அவர் எம்மை விட்டுப் பிரிந்து விடுவார் என்று யாம் எண்ணவில்லை; எதிர்பார்க்கவுமில்லை.

---

*17-12-54—இல் பாரதியாருடைய ஈமக்கடன்கள் நடந்த ஞான்று கொழும்பு வானொலி நிலையத்திற் பேசியது.

அவர் மறைவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர்த்தான் அவரைக் கொழும்பிலே அவருடைய மருகருடைய இல்லத்திற் சந்தித்தேன். அந்தச் சந்திப்புத்தான் கடைசிச் சந்திப்பு என்பதை அப்பொழுது யான் அறியேன். ஆனால் அதுவே கடைசிச் சந்திப்பாகி விட்டது என்பதை இப்பொழுது நினைக்க நினைக்க உள்ளம் உருகுகிறது.

வித்துவான் தண்டபாணி தேசிகரும் தினகரன் ஆசிரியரும் அவரைக் காணுதற்கு என்னுடன் அன்று வந்தார்கள். பண்டிதமணி அவர்களுடைய உடலிற் சிறிது வாட்டங் காணப்பட்டதெனினும் உள்ளத்திலும் உரையிலும் சோர்வு காணப்படவில்லை. வழக்கம் போலத் தமக்குரிய தனிமுறையில் ஆராமை ததும்ப உரையாடினார். உடல் நலம் சிறிது குறைந்த நிலையிலும் அவர்தம் உள்ளத்தின் ஊக்கங்கண்டு மகிழ்ந்தேம். "உடற்பிணி முழுதும் நீங்கி உமையருளை வேண்டி நிற்கிறேன். இன்னுந் தமிழ்த்தாய்க்குத் தொண்டுகள் பல செய்தற்கு விரும்புகிறேன்" என்று உவகையுடன் கூறினார். பின்னர்த் திருவாசகம் பற்றிய உரையாடல் நிகழ்ந்தது. உள்ளங்கனிய ஊன் கரைய அழுதுதான் பேரின்பம் பெறலாம் என்ற உண்மையை விளக்கினார். "அழுதால் வினையேன் உனைப் பெறலாமே" எனும் மணிவாசகத்தையும் நினைப்பூட்டினார்.

தமிழின்பத்திலே திளைத்துச் செம்மாந்திருக்கும் பெரும் புலவர்கள் இவ்வுலகிலே எதனையும் பொருட்படுத்த மாட்டார்கள்; எதற்கும் அடிபணிய மாட்டார்கள்; அவர்களுடைய உள்ளமும் உரையும் வீறுபடைத்து விளங்கும். இத்தகைய பெரும் புலவர்கள் "இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் எனினும் வேண்டேன்" என்று பாடுவார்கள். இத்தகையவர்களுடைய பெருமிதமும் தமிழ்ப்பற்றும் உடையவர் நம் பாரதியார். "யான் மீண்டும் தமிழ்நாட்டிலே தமிழ் மகனாகப் பிறந்து தமிழுக்குத் தொண்டுசெய்யவே விரும்புகிறேன்" என்று அவர் அன்று எமக்குக் கூறினார். இம்மையிலன்றி மறுமையிலும் தமிழ்ப்பணி செய்ய விரும்பிய தமிழ்ச் சான்றோராகிய அவரைப் போல் இனி யாரைக் காணல் முடியும்?

பழமையும் பண்பும் பாராட்டி மகிழ்வதிலும் பாரதியாருக்கு நிகரானவர்களைக் காணுதல் முடியாது. பழந்தமிழ்ப் பண்பாடும், பழுத்த புலமையும், அழுத்தமான தமிழ்ப்பற்றும், உள்ளக்கிளர்ச்சியும் உடைய அவருடன் உரையாடுவதில் ஒருதனி இன்பம் உண்டு. அவருடைய உரையாடலில் உள்ளத்தொளி வீசும்; அதனைக் கேட்கக்கேட்க உள்ளந் தளிர்க்கும்; உயிருந்

தளிர்க்கும்; தமது உரையாடலினால் ஒரு புது உலகத்துக்கு அவர் அன்பர்களை அழைத்துச் சென்று விடுவார்; அந்த உலகத்திலே தமிழ்த்தாய் தனி அரசியாகக் காட்சி தருவாள்; தமிழின் பெருமையை மறந்து அதனைப் போற்றாத மக்களையுங் கூடத் தமிழ்த்தொண்டர்களாகவுந் தமிழ்ப் பத்தர்களாகவும் மாற்றிவிடும் ஆற்றல் வாய்ந்தது அவர் தம் உரையாடல்.

இந்த உரையாடலின் சிறப்புக்கு அவருடைய உள்ளமே காரணமாகும். அது தமிழ் உள்ளம்; கனிந்த உள்ளம்; கற்பனை வளம் நிறைந்த உள்ளம்; நல்லதை இனியதை உயர்ந்ததைக் கண்டு போற்றி மகிழும் உள்ளம்; தமிழ்ப் புலமை எப்பொழுதும் ஊற்றெடுக்கும் உள்ளம்.

தமிழ்நூல்களைப் புலமைத்துறை முற்றிய நல்லாசிரியர்களிடம் முறையாகக் கற்றுத் தேர்ந்த அவரிடம் இயற்கையாகவே புலமையும் அமைந்திருந்தது; மதிவளமும் நிறைந்திருந்தது. "விதி முறையிற் கலைபயின்ற வேணுகோபால் கண்ணன் மிக்க மதிவலி படைத்த வீரன்" என்று அவரைப் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் பாடியது மிகப் பொருத்தமாக அமைந்துளது.

"பாடிப்பாடிப் படிவ முற்றுருகி
உணர்ச்சியே உருப்பட் டொளிரும்
பழுத்த புலமைப் பசும் பாவலர்"

எனப் பாரதியார் பாடியுள்ளார். தமது உள்ள நிலையினையே—உணர்ச்சிப் பெருக்கினையே அவர் இவ்வாறு தீட்டிக் காட்டினார். பழுத்த புலமைப் பசும் பாவலர் என, அவரையே தமிழ் கூறு நல்லுலகம் போற்றுகிறது. அகராதிகளைப் புரட்டிச் சொற்களைத் திரட்டிப் பாடும் பாவலர்களும், கொச்சைத் தமிழில் அச்சமின்றிப் பாடும் கவிஞர்களும் மலிந்த இக்காலததில், பாரதியார் அவர்கள் உணர்ச்சிப் பெருக்கா லுந்தப்பட்டு இனிய தமிழில்—என்றுமுள தென்றமிழில்—பல பாடல்களைப் பாடித் தமிழினை வளம்படுத்தியுளார். அவர்கள் இயற்றிய செழுங்கதிர்ச் செல்வத்திலுள்ள பாடல் ஒன்று அவருடைய பாடல் வேட்கையை நன்கு விளக்குகிறது.

பறவைப் பார்ப்பு முன்வரவைப் பார்த்து மகிழச் செஞ்சிறுவாய்
நிறையப் புகலும் பாட்டெல்லாம் நெறியே வந்தென் செவிப்புகுந்தும்
நறவு பழுத்த செந்தமிழால் நானோ பாடா திருந்திடுவேன்?
கறவை கன்றாட் டுங்காலங் காட்டி வரு கதிரே!

இந்தப் பாட்டிலே அவர் கூறியபடி நறவு பழுத்த செழுந்தமிழால் அவர் பாடிய பாடல்கள் பன்னயங்களுடன் மிளிர்கின்றன.

சங்கச் சான்றோர் தம் செய்யுள்களோடு ஒப்ப வைத்து எண்ணப் படும் தகைமை சான்ற செய்யுள்களைக் கொண்ட உலகியல் விளக்கம் எனும் நூல் அவருடைய பழுத்த தமிழ்ப்புலமைக்கு மாத்திரமன்றிச் சங்கத் தமிழ்ப்பயிற்சிக்கும் எடுத்துக் காட்டாக விளங்குகிறது. இந்நூலினை விபுலாநந்த அடிகளாரே பதிப்பித்துள்ளார் எனின், இதன் பெருமையைப் பற்றி மேலுங் கூறல் வேண்டுமா! புத்திளஞ்செங்கதிர், செழுங்கதிர்ச்செல்வம் முதலியவற்றுடன் பல தனிப்பாடல்களையும் அவர் இயற்றித் தமிழினைச் செழிக்கச் செய்துளார்.

திருவாசகத்துக்கு அவர் எழுதி வெளியிட்ட ஆராய்ச்சிப் பேருரை, மிகப்பெரியதொரு தமிழ்ப்பணியாகும். திருவாசகத்துக்குப் பேரறிஞர் பலர் உரை எழுதியுள்ளனர். எனினும் முழு நூலுக்கும் சிறந்த முறையில் உரை எழுதிப் பணச் செலவையும் பொருட்படுத்தாமல், வெளிப்படுத்திய தனிப் பெருமை பாரதியார் அவர்களுக்கே உரியது. அவருடைய பன்னூற் பயிற்சி, ஆராய்ச்சித்திறன், புலமைச் சிறப்பு, சைவசித்தாந்த நுண்ணறிவு, கட்டுரைவன்மை முதலியவற்றை இவ்வுரை நன்கு காட்டுகிறதென அறிஞர்கள் கூறுகிறார்கள். அவருடைய இப் பெருந்தொண்டினைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்து மகிழக் கொழும்பு மாநகரிலுள்ள அன்பர்கள் பலர் முயன்றார்கள். ஆனால், அவரோ என்றும் நிலைத்த புகழாடையினைப் போர்த்துக் கொண்டார்.

தமிழ்த் தாயிடத்தும் தமிழ்ப் புலவர்களிடத்தும் அவர் அளவில்லாத அன்புடையவர். தமிழ் மொழியிற் கொண்ட பெருங் காதலினால் தமது பெயரை (நவநீத கிருஷ்ண பாரதி) **மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனூர்** எனத் தனித்தமிழில் மாற்றி அமைத்தார்.

தமிழாசிரியராகப் பல ஆண்டுகள் கடமையாற்றித் தமிழறிஞர்கள் பலரை நம் நாட்டுக்கு நல்கியுள்ளார். இராமநாதன் கல்லூரியும், பரமேசுவரக் கல்லூரியும் அவர்தம் தொடர்பினாலே தமிழ்வளம் பெற்றுயர்ந்தன. மதுரைத் தமிழ்ச்சங்கம், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் முதலியவற்றின் வளர்ச்சி கருதியும உழைத்தார். தம் கட்டுரைகளினாலும் விரிவுரைகளினாலும் தமிழ் உணர்ச்சியை ஊட்டித் தமிழ் மக்களை விழிப்படையச் செய்த பெருந்தகையாளராகவும் அவர் விளங்கினார். வளர்க அவர் எழுப்பிய தமிழுணர்ச்சி! வாழ்க அவர் புகழ்!!

மறைவுற்ற தமிழ் நூல்கள்

[மயிலை. திரு. சீனி. வேங்கடசாமி]

(சிலம்பு : உக, பரல் : ҈, உகூசு-ஆம் பக்கத் தொடர்ச்சி)

111. பல்சந்த மாலை

பல்சந்தமாலை என்னும் நூலிலிருந்து சில செய்யுள்களைக் களவியற் காரிகை யுரையாசிரியர் மேற்கோள் காட்டுகிறார். இதனால் இப் பெயரையுடைய நூல் ஒன்றிருந்தது என்பது தெரிகிறது. பாண்டிநாட்டிலே காயற்பட்டினத்திலே இருந்த ஒரு முகமதியப் பிரபுவின்மீது பாடப்பட்டது இந்நூல். இது அகப்பொருள் இலக்கிய நூல். களவியற் காரிகைப் பதிப்பாசிரியர் இந்நூலைப்பற்றிக் கூறுவது வருமாறு :

"பல்சந்தமாலை யென்ற பெயரையுடைய நூல் சில செய்திகளைப் புலப்படுத்துகின்றது. பன்னிரு பாட்டியலிற் பல்சந்தமாலை யென்றொரு பிரபந்தவகை கூறப்பட்டுள்ளது. இந்நூல் அப் பிரபந்த வகையைச் சார்ந்ததாக இருத்தல் கூடும். ஆனால் இதன்கணின்று களவியற்காரிகை யுரையிற் காட்டப்படுவன வெல்லாம் கலித்துறைச் செய்யுட்களே இந்நூல் வச்சிரநாட்டு வகுதாபுரியில் அரசு புரிந்து வந்த அஞ்சுவன்னத்தவர் மரபினாகிய ஓர் முகமதிய மன்னனைக் குறித்துப் பாடப் பெற்றதாகும். வகுதாபுரியை இக்காலத்திற் காயற்பட்டினம் என வழங்குவர்......................வகுதாபுரிக்கு 'அந்துபார்' என வொரு பெயரும் இருத்தல் வேண்டும் என்பது ஒரு செய்யுளால் புலப்படுகின்றது."

பல்சந்தமாலை இயற்றிய ஆசிரியர் பெயர், காலம் முதலியன தெரியவில்லை. பல்சந்தமாலையிலிருந்து எட்டுச் செய்யுள்கள் களவியற்காரிகையுரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. அச் செய்யுள்கள் இவை :

கலைமதி வாய்மைக் கலும்பா வழிவருங் கற்பமைந்த
தலைமைய ரேழ்பெருந் தோங்க மும்பெற்ற நநதசச
மலையனமா மதில் வச்சிர நாடன்ன வாணுதறன்
முலையிணை தோய்ந்ததெல் லாங்கன வேயென்று
முன்னுவனே. 1

நாட்டம் புதைக்கின்ற தென்னீ மடந்தை நவகண்டமே
லீட்டம் புகழ்வின்னன் மேவா ரெனவிங்ஙன் யான்வருந்த
வாட்டம் பயின்றுங் கிகிலின் குழம்பணிந் தாகமெங்கும்
வேட்டந் தெரிகின்ற கொங்கைக ளென்னை மிகைசெய்தவே. 2

நகுதா மரைமலர் சூழ்வாவி சூழ்வச்ர நாடர்தங்கள்
வகுதா புரியன்ன வாணுத லீர்மற்ற வார்தழையு
மிகுநாண் மலர்களுங் கொண்மின்கள் கொள்ளா விடின்மதுவந்
தொகுகாம னைங்கணை யாலெம தாவி துவக்குண்ணுமே. 3

செம்முக மானதர் செங்குங்கு மப்புயர் சீர்சிறந்த
மைம்மலி வாசப் பொழில்வாய் மதியன்ன வாணுதலீர்
மும்மத மாரி பொழியப் பொழிமுகில் போல்முழங்கிக்
கைம்மலை தான்வரக் கண்டதுண் டோநும் கடிபுனத்தே. 4

இயவன ராசன் கலுபதி தாபூத லெண்ண வந்தோர்
அயன்மிகு தானைய ரஞ்சுவன் னத்தவ ரஞ்சலென்னக்
கயவர்கள் வாழ்பதி போலத் தினைப்புனங் காய்கொய்துபோம்
பயன்விளை வாம்படி பூத்தது வேங்கை பணிமொழியே. 5

பிறையார் நறுநுதற் பேதைதன் காரணத் தாற்பெரும
மறைநா ளிரவில் வருவது நீயொழி வச்சிரநாட்
டிறையா கியகலு பாமுத லானவர் யானைகணின்
றறைவாரும் விஞ்சத் தடவிகள் சூழு மணிவரையே. 6

வானது நாணக் கொடையா லுவகை வளர்த்தருளும்
சோனகர் வாழுஞ் செழும்பொழில் சூழ்ந்து பாரனையா
டானணி வாணுதல் கண்டும் பகலே தனித்தனியே
மானமி லாதிரை தேரும் பறவைக டாமழகழிந்தே. 7

வில்லார் நுதலியு நீயுமின் றேசென்று மேவுதிர்கு
தெல்லா முணர்ந்தவ ரேழ்பெருந் தாங்கத் தியவனர்க
ளல்லா வெனவந்து சத்தியுஙந தாரவகை தொழுகுஞ்சீர்
நல்லார் பயிலும் பழனங்கள் சூழ்தரு நாட்டகமே. 8

112. செயிற்றியம்

செயிற்றியம் என்னும் பெயருள்ள நாடகத் தமிழ் இலக்கண நூல் ஒன்று இருந்தது என்பது சிலப்பதிகார அரும்பொருளுரையாசிரியர், அடியார்க்கு நல்லார், இளம்பூரண அடிகள், பேராசிரியர், யாப்பருங்கல விருத்தியுரைகாரர் ஆகிய உரையாசிரியர்களின் உரைகளினால் தெரிகிறது. செயிற்றியனார் என்னும் புலவர் செய்த நூலாகலின் இதற்குச் செயிற்றியம் என்னும் பெயர் உண்டாயிற்று. இந்நூல் அடியார்க்கு நல்லார் காலத்திலேயே மறைந்துவிட்டது. என்னை ?

"நாடகத் தமிழ் நூலாகிய பரதம் அகத்திய முதலாகவுள்ள தொன்னூல்களுமிறந்தன. பின்னும் முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றியம் என்பனவற்றுள்ளும் ஒரு சார் சூத்திரங்

கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல் நடு இறுதி காணாமை யின் அவையும் இறந்தன போலும்" என்று சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் அவர் கூறுவது காண்க.

செயிற்றியம் என்னும் நூலைப்பற்றிப் பேராசிரியர் தமது உரையில் (தொல்: பொருள்: மெய்ப்பாட்டியல் 2-ஆம் சூத்திர உரை) இவ்வாறு எழுதுகிறார்:—

"இங்ஙனம் அடங்குமென்பது நாடக நூலுள்ளுஞ் சொல் லுபவோ வெனின், சொல்லுபவாகலினன்றே அதன் வழி நூல் செய்த செயிற்றியனார் சுவையுணர்வும் பொருளும் ஒன்றாக வடக்கிச் சுவையுங் குறிப்புஞ் சத்துவமுமென மூன்றாக்கி வேறு வேறிலக் கணங் கூறி அவற்றை,

"எண்ணிய மூன்று மொருங்கு பெறுமென
நுண்ணிதி னுணர்ந்தோர் நுவன்றன ரென்ப,

என்றோதினா ராயிற்றென்பது."

யாப்பருங்கல விருத்தியுரைகாரர், தமது உரையில் ஆங் காங்கே இந்நூலைக் குறிப்பிடுகிறார்:—

"கலியுறுப்புக்கு அளவைச் செயன் முறை யுள்ளும் செயிற் றியத்துள்ளும் அகத்தியத்துள்ளும் கண்டு கொள்க.

(யாப்பருங்கலம்: செய்யுளியல் 29-ஆம் சூத்திர உரை.)

"மற்றையன விவ்வாறு செயிற்றியத்துள்ளும் அகத்தியத் துள்ளும் ஓதிய விலக்கணந் தழுவி கிடந்தனவில்லை யென்பது."

(யாப்பருங்கலம்: செய்யுளியல் 31-ஆம் சூத்திர உரை.)

"வெண்டுறை. வெண்டுறைப் பாட்டாவன: பதினோராடற்கு மேற்ற பாட்டு. அவை அல்லிய முதலியனவும் பாடல்களாக ஆடு வாரையும், பாடல்களையும், கருவியையும் உந்து இசைப்பாட் டாய் வருவன........இனி, இவற்றி னுறுப்பு ஐம்பத்து மூன்றுவன: அல்லிய உறுப்பு 6. கொட்டி யுறுப்பு 4, குடையுறுப்பு குடத் தினுறுப்பு 5, பாண்டரங்க உறுப்பு 6, மல்லாடலுறுப்பு 5, துடி யாடலுறுப்பு 6, கடையத்துறுப்பு 6, பேட்டின் உறுப்பு 4, மரக் காலாடலுறுப்பு 4, பாவையுறுப்பு 3 எனவிவை. இவற்றின் றன்மை செயிற்றியமும் சந்தமும் பொய்கையார் நூலும் முதலியவற்றுட் காண்க"

(யாப்பருங்கலம்: ஒழிபியல் "மாலை மாற்றே" என்னும் சூத்திர உரை.)

அடியார்க்கு நல்லார் தமது சிலப்பதிகார உரையில், செயிற் றிய நூலிலிருந்து சில சூத்திரங்களை மேற்கோள் காட்டுகிறார். அவை வருமாறு:—

" அறமுத ளென்கு மொன்பான் சுவையு
முறைமுன் னாடக முன்னோ ரும் "

எனவும்,

'அறம்பொரு ளின்ப மரசர் சாதி'

எனவும்,

'அறம்பொருள் வாணிகர் சாதியென் றறைப'

எனவும்,

'அறமேற் சூத்திர ரங்க மாகும்'

எனவும் சொன்னார் செயிற்றியனார்."

(சிலம்பு: அரங்கேற்றுகாதை 13-ஆம் அடி அடியார்க்கு நல்லார் உரை மேற்கோள்.)

'அக்கோ லேழுகன் றெட்டு நீண்டு
மொப்பா லுயர்வு மொருகோ லாகு
நற்கோல் வேந்த னயக்குறு வாயின்
முக்கோ லுறு முயரவு முரித்தே'

என்றார் செயிற்றியனார்."

(சிலம்பு: அரங்கேற்று காதை. 101-ஆம் அடி. அடியார்க்கு நல்லார் உரை மேற்கோள்.)

" பிணியுங் கோளும் நீங்கிய நாளா
லணியுங் கவினு மாசற வியற்றித்
தீதுதீர் மரபிற் றீர்த்த நீரான்
மாசது தீர மண்ணுநீ ராட்டித்
தொடலையு மாலையும் படலையுஞ் சூட்டிப்
பிண்ட முண்ணும் பெருங்களிற்றுத் தடக்கை மிசைக்
கொண்டுசென் றறீஇக் கொடியெடுத் தார்த்து
முரசு முருடு முன்முன் முழங்க
வரசு முதலான வைம்பெருங் குழுவுந்
தேர்வலஞ் செய்து கவிகைக் கொடுப்ப
வூர்வலஞ் செய்து புகுந்த பின்றைத்
தலைக்கோல் கோட றக்க தென்ப.'

என்றார் செயிற்றியனார்."

(சிலம்பு: அரங்கேற்றுகாதை, தலைக்கோலமைதி அடியார்க்கு நல்லார் உரைமேற் கோள். சிலம்பு, அரும்பொருள் உரையாசிரியரும் இச்செய்யுளைத் தமது உரையில் மேற்கோள் காட்டுகிறார்.)

இளம்பூரண அடிகள் தமது தொல்காப்பிய உரையில், செயிற்றிய நூலிலிருந்து கீழ்க்கண்ட சூத்திரங்களை மேற்கோள் காட்டுகிறார் :—

“ மத்திம மென்பது மாசறத் தெரியிற்
சொல்லப் பட்ட வெல்லாச் சுவையொடு
புல்லா தாகிய பொலிவிற் றென்ப. 1

நயனுடை மரபி னிதன்பய மியாதெனின்
சேர்த்தி யோர்க்குஞ் சார்ந்துபடு வோர்க்கு
மொப்ப நிற்கு நிலையிற் றென்ப........... 2

உய்ப்போ னிதனை யாரெனின் மிக்கது
பயக்குந் தாபதர் சாரணர் சமணர்
கயக்கறு முனிவ ரறிவரொடு பிறருங்
காமம் வெகுளி மயக்க நீங்கிய
வாய்மை யாளர் வகுத்தனர் பிறரு
மச்சுவை யெட்டு மவர்க்கில வாதலி
னச்சுவை யொருதலை யாதலி னதனை
மெய்த்தலைப் படுக்கவிதன் மிகவறிந் தோரே........... 3

என்பது செயிற்றியச் சூத்திரம்.”

‘இருவகை நிலத்தி னியல்வது சுவையே’ 4

என்றும்,

‘நின்ற சுவையே. . . . .
ஒன்றிய நிகழ்ச்சி சத்துவ மென்ப.’ 5

என்றும்,

‘ சத்துவ மென்பது சாற்றுங் காலை
மெய்ம்மயிர்க் குளிர்த்தல் கண்ணீர் வார்த
னடுக்கங் கடுத்தல் வியர்த்த றேற்றங்
கொடுங்குரற் சிதைவொடு நிரல்பட வந்த
பத்தென மொழிப சத்துவந் தானே’

என்றும் சார்பொருள் உரைப்ப.”

(தொல். பொருள் : மெய்ப்பாட்டியல் 1-ஆம் சூத்திரம்.
இளம்பூரண அடிகள் உரை மேற்கோள்.)

‘ உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதன்
மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே’

(தொல் : பொருள் : மெய்ப்பாடு 3-ஆம் சூத்திரம்.
இளம்பூரண அடிகள் உரை மேற்கோள்.)

"நகையெனப் படுதல் வகையா தெனிலே
நகையெனச் செய்வோன் செய்வகை நோக்கு
நகையொடு நல்லவை நனிமகிழ் வதுவே."

(நகைச்சுவை)

"உடனிவை தோன்று மிடமியா தெனினே
முடவர் செல்லுஞ் செலவின் கண்ணு
மடவோர் சொல்லுஞ் சொல்லின் கண்ணுங்
கவற்சி பெரிதுற் றுரைப்போர்க் கண்ணும்
பிதற்றிக் கூறும் பித்தர் கண்ணுஞ்
சுற்றத் தோரை யிகழ்ச்சிக் கண்ணு
மற்று மொருவர்கட் பட்டோர் கண்ணுங்
குழவி கூறு மழலைக் கண்ணு
மெலியோன் கூறும் வலியின் கண்ணும்
வலியோன் கூறும் மெலிவின் கண்ணும்
ஒல்லார் மதிக்கும் வனப்பின் கண்ணுங்
கல்லார் கூறுங் கல்விக் கண்ணும்
பெண்பிரி தன்மை யலியின் கண்ணு
மாண்பிரி பெண்மைப் பேடிக் கண்ணுங்
களியின் கண்ணுங் காவாலி கண்ணுந்
தெளிவிலா ரொழுகுங் கடவுளார் கண்ணு
மாரியர் கூறுந் தமிழின் கண்ணுங்
காரிகை யறியாக் காமுகர் கண்ணுங்
கூனர் கண்ணுங் குறளர் கண்ணுங்
மூமர் கண்ணுஞ் செவிடர் கண்ணு
மான்ற மரபி னின்னுழி யெல்லாந்
தோன்று மென்ப துணிந்திசி னோரே."

(தொல்: பொருள்: மெய்ப்பாடு: 4-ஆம் சூத்திரம்.
இளம்பூரண அடிகள் உரை மேற்கோள்.)

(அழுகைச்சுவை)

"கவலை கூர்ந்த கருணையது பெயரே
யவல மென்ப வறிந்தோ ரதுதா
னிலைமை யிழந்து நீங்குதுணை யுடைமை
தலைமை சான்ற தன்னிலை யழிதல்
சிறையணி துயரமொடு செய்கையற் றிருத்தல்
குறைபடு பொருளொடு குறைபா டெய்தல்
சாப மெய்தல் சார்பிழைத் துக் கலங்கல்
காவ லின்றிக் கலக்கமொடு திரிதல்
கடகந் தொட்டகை கயிற்றொடு கோடல்

முடியுடைச் சென்னிபிற ரடியுறப் பணித
லுளைப்பரி பெருங்களி றூர்ந்த சேவடி
தளைத்திளைத் தொலிப்பத் தளர்ந்தவை
நிறங்கிள ரகல நீரொடு சேர்த்தல்
மறங்கிளர் கயவர் மனந்தவப் புடைத்தல்
கொலைக்களங் கோட்டங் கோன்முனைக் கவற்சி
யலைக்கண் மாறு வழுகுர லரவ
மின்றோ ரன்னவை யியற்பட நாடித்
துன்னின ருணர்க துணிவறிந் தோரே."

"இதன்பய மிவ்வழி நோக்கி
யசைந்தன ராகி யழுத லென்ப."

என்பன செயிற்றிய மாகலின்."

(தொல்: பொருள்: மெய்ப்பாடு. 5-ஆம் சூத்திரம்.
இளம்பூரண அடிகள் உரை மேற்கோள்.)

(உவகை)

"ஒத்த காமத் தொருத்தனு மொருத்தியு
மொத்த காமத் தொருவ னொடு பலரு
மாடலும் பாடலுங் கள்ளுங் களியு
மூடலு முணர்தலுங் கூடலு மிடைந்து
புதுப்புனல் பொய்கை பூம்புன லென்றிவை
விருப்புறு மனத்தொடு விழைந்து நுகர்தலும்
பயமலை மகிழ்தலும் பனிக்கட லாடலும்
நயனுடை மரபின் நன்னகர்ப் பொலிதலுங்
குளம்பரிந் தாடலுங் கோலஞ் செய்தலுங்
கொடிநகர் புகுதலுங் கடிமனை விரும்பலுந்
துயிற்க ணின்றி யின்பந் துய்த்தலு
மயிற்கண் மடவா ராடலுண் மகிழ்தலு
நிலாப்பயன் கோடலு நிலம்பெயர்த் துறைதலுங்
கலம்பயில் சாந்தொடு கடிமல ரணிதலு
மொருங்கா ராய்ந்த வின்னவை பிறவுஞ்
சிருங்கா ரம்மென வேண்டுப விதன்பயன்
துன்ப நீங்கத் துகளறக் கிடந்த
வின்பமொடு புணர்ந்த வேக்கழுத் தம்மே."

(தொல்: பொருள்: மெய்ப்பாடு. 11-ஆம் சூத்திரம்.
இளம்பூரண அடிகள் உரை மேற்கோள்.)

இந்நூலை இயற்றிய செயிற்றியனாரைப் பற்றியும் அவர் காலத்தைப்பற்றியும் ஒருசெய்தியும் தெரியவில்லை.

113. செயன்முறை

செயன்முறை என்பது நாடகத்தமிழ் இலக்கணநூல் எனத் தெரிகிறது. இந்நூலை யாப்பருங்கலவிருத்தி யுரைகாரர் தமது உரையில் குறிப்பிடுகிறார்.

"கலியுறுப்புக்கு அளவை செயன்முறையுள்ளும், செயிற்றியத் துள்ளுங் கண்டுகொள்க. அவை யீண்டுரைப்பிற் பெருகும்."

என்று அவ் உரையாசிரியர் (யாப்பருங்கலம் செய்யுளியல். 29-ஆம் சூத்திர உரை.) எழுதுகிறார். செயன்முறை என்னும் இந்நூலைச் செயிற்றியம் என்னும் நாடகத்தமிழ் இலக்கண நூலுடன் சேர்த்து உரையாசிரியர் குறிப்பிடுகிறபடியினாலும், செயன்முறை என்னும் பெயரினாலும் இந்நூல் நாடகத்தமிழ் இலக்கணநூல் என்பது நன்கு தெரிகிறது.

இந் நூலைப்பற்றியும் இந் நூலாசிரியரைப் பற்றியும் வேறு செய்திகள் ஒன்றும் தெரியவில்லை.

114. ஓவியநூல்

அடியார்க்குநல்லார் தமது சிலப்பதிகார உரையிலே ஓவிய நூலைக் குறிப்பிடுகிறார். குறிப்பிடுவதோடு அந்நூலிலிருந்து ஒரு சூத்திரத்தையும் மேற்கோள் காட்டுகிறார். சிலம்பு, வேனிற்காதை 25-ஆம் அடி உரையில், அடியார்க்குநல்லார் இவ்வாறு எழுதுகிறார் :—

"ஓவியநூலுள் நிற்றல் இருத்தல் கிடத்தல் இயங்குதல் என்னும் இவற்றின் விகற்பங்கள் பலவுள; அவற்றுள் இருத்தல்: திரிதரவுடையனவும் திரிதரவில்லனவுமென இருபகுதிய. அவற்றுள் திரிதரவுடையன :—யானை தேர் புரவி பூனை (?) முதலியன. திரிதரவில்லன ஒன்பது வகைப்படும். அவை :—பதுமுகம், உற்கட்டிதம், ஒப்படியிருக்கை, சம்புடகம், அயமுகம், சுவத்திகம், தனிப்புடம், மண்டிலம், ஏகபாதம் எனவிவை. என்னை ?

"பதுமுக முற்கட்டிதமே யொப்படி
யிருக்கை சம்புட மயமுகஞ் சுவத்திகந்
தனிப்புட மண்டில மேக பாதம்
உளப்பட வொன்பது மாகுந்
திரிதர வில்லா விருக்கை யென்ப."

என்றார் ஆகலானும்......"

ஓவிய நூலைப்பற்றியும் அதன் ஆசிரியரைப்பற்றியும் செய்திகள் ஒன்றும் தெரியவில்லை. (தொடரும்)

சொல்லும் சொல்லாதோ கதை

[திரு. பி. எல். சாமி, பி. எஸ்ஸி.]

புதைபொருள் ஆராய்ச்சியாளனுக்குக் கல்லும் கதை கூறும், ஓட்டாஞ் சில்லும் காலங் காட்டும். உயிர்நூல் ஆராய்ச்சியாளர்க்குப் பள்ளத்திலெடுத்த பல்லும் பல கதை கூறும். எலும்பும் என்னென்னவோ சொல்லும். கலைஞனுக்குக் கல்லும் கவிதை சொல்லும். அதுபோல சொல்லும் கதை கூறும் மொழிநூலறிஞனுக்கு. ஒரு சொல் பல காலத்தில் பல கோலங் கொண்டு உருமாறிப் பொருள் மாறிக் 'கண்ணாமூச்சி' ஆடலாம். மாரீச மானைப்போல் மறைந்து மறைந்து இலக்கியத்திலும் பேச்சிலும் தோன்றலாம். காலமென்னும் மணற் பரப்பில் சொல்லின் சுவடு தேடிச் செல்வான் மொழிநூலறிஞன். சுவடுகள் எங்கேயாவது விட்டுப்போய்விடும். இருப்பினும் இடைவிட்ட சுவட்டைக் கண்டு பிடித்துச் சொல்லின் வேரையே அடைந்து விடுவான். இந்த ஒற்றுவேலை, வேவுவேலை அறிவுக்குகந்த பொழுது போக்கு. சொல்லின் சுவட்டைத் தேடிப்போனால் அது நம்மை வரலாற்றுக் காலத்துக்கு முன்னரே கொண்டு சேர்க்கலாம். இடைக் காலத்தோடு நின்று விடலாம். அல்லது சுவடு போகப் போக மறைந்தும் விடலாம்.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாச் சில அடிப்படைச் சொற்கள் வரலாற்றுக் காலத்துக்கு (Historic period) முன்னரே தோன்றின. தீ என்பது அவைகளில் ஒன்று. இந்தியாவிலுள்ள பல மொழிகளிலும் நெருப்பைக் குறிக்கும் சொல் 'அக்' என்ற வேர்ச் சொல்லின் அடிப்படையாகத் தோன்றியவையே. ஆனால், தமிழ் முதலிய திராவிட மொழிகளில் அந்த வேர்ச் சொல்லடியாகப் பிறக்கவில்லை. இத்தகைய அடிப்படைத் தேவைக்கான சொற்கள் எளிதில் மொழி வேற்றுமையையும், இன்னும் இனவேற்றுமையையும் தெளிவாக எடுத்துக்காட்டும்.

எழுத்து என்ற சொல்லின் வேர்ச்சொல் கட்புலனாம் பொருள் பற்றியதா அல்லது செவிப்புலனாம் பொருள் பற்றியதா? இது ஒரு சிக்கல். எழுத்து என்ற சொல்லின் வேர்ச் சொல் வரைவது என்ற பொருள் கொண்டது. ஆதலின், எழுத்து என்பது முதலில் சித்திரத்தைக் குறித்ததென்றும், பின்னர் படிக்கும் குறியீட்டைப் பற்றி வழங்கியதென்றும் கூறுவர். வணிக முத்திரைகளில் பொறித்த சித்திரத்தை 'கண்ணெழுத்து' என்று பழங்காலத்தில் வழங்கினர். மொகஞ்சதாரோவிலும் முதலில் இந்த சித்திரங்கள் வணிகத்திற்குப் பயன்

பட்டு, பின்னரே எழுத்தாகமாறின என்று தெரிகிறது. புடைவையில் வரையப்பட்ட சித்திரத்தையும் எழுத்து என்று அழைத்தனர். எழுத்தென்பது கண்ணால் பார்க்க முடியாத ஓசையென்று கொண்டு, அதன் வேர்ச்சொல் எழுச்சிப் பொருள் கொண்டதென்பார் சிலர். எழுத்தென்பதின் வேர்ச்சொல் ஓசைபற்றியதென்பதற்குச் சான்றுகள் உள. "சாத்தன் யாழ் எழூஉம், குழல் ஊதும், பாடும்" என்ற சொற்றொடர்களில் எழூஉம் எனும் சொல் ஒலி மேலெழும்புவதைக் குறித்து வருவதைக் கவனிக்க வேண்டும். பாடும்போது ஓசை உயர உயர ஏறுவதற்கு 'எழால்' என்று இசையில் வழங்கி வருவதும் கவனிக்க வேண்டும். இவைகளில் ஒலி எழுதல் என்ற பொருளிலேயே வேர்ச்சொல் வழங்கி வருகின்றது. எழுத்து என்பதின் வேர்ச்சொல்லும் மேலெழும் ஓசையையே குறித்தது என்பது மிகவும் பொருத்தமாகக் காணப்படுகிறது.

சாவு என்ற சொல் எப்படித் தோன்றியது? ஏன் தோன்றியது? இச் சொல் நம்மைப் பழங் கற்கால நாகரிகத்திற்குக் கூட்டிச் செல்கிறது. சங்க இலக்கியத்தில் கற்கால நாகரிகம் பற்றிய குறிப்புகள் இல்லாமலில்லை. கற்காலத்தில் 'அம்புத் தலைகள்' (Arrow Heads) எனப்படும் கருவிகளைப் பயன்படுத்தினர் இவைகள் கூர்மையான தேய்க்கப்பட்ட கற்களாகும். இக் கற்களை 'கூர்ங்கல்' என்று தமிழில் சொல்லினர்.

"மாய்த்த போல மழுகுநுனை தோற்றிப்
பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல்
விரனுதி சிதைக்கும்............" (அகம். ரு)

இக் கற்கள் மழுகிய நுனியையும், பதிக்கப்பட்டன போலவும் இருந்தன எனப்படுவதால் இவை வெறுங் கற்கள் அல்ல. 'அயில் காய்ந்தன்ன கூர்ங்கல்' என்ற வரியிலும் வேலின் அலகு போன்ற கற்கள் என்று கூறப்படுகின்றது. ஆதலின், இவை வெறுங் கற்களன்று. கற்கால மனிதரின் கருவிகள். இவைகள் பாலை நிலங்களில் இருப்பதாகக் கூறப்பட் டிருக்கின்றது.

மற்றும் ஒரு பழங்காலச் செய்தியைத் தமிழ்நூல்களில் படிக்கலாம். விலங்குகளின் மருமத்தில் அம்பு எய்யும் கொடிய வழக்கம் இருந்திருக்கின்றது.

"இரும்புவடித் தன்ன கருங்கைக் கானவன்
விரிமலர் மராஅம் பொருந்திக் கோறெரிந்து
வரிநுதல் யானை யருநிறத் தழுத்தி
யிகலடு முன்பின் வெண்கோடு கொண்டுதன்." (அகம். ௧௭௨)

இவ் வழக்கம் பிற பாடல்களிலும் கூறப்பட்டிருக்கின்றது. ஸ்பெயினில் அகப்பட்ட பழங் கற்கால மனிதனின் குகைகளில் அவன் வரைந்த ஓவியங்கள் அப்படியே காணப்பட்டன. விலங்கு களின் மருமத்தில் அம்பு தைத்திருப்பதுபோல பல ஓவியங்கள் அகப்பட்டன. அப்படி வரைந்தால் அவ் விலங்குகள் வேட்டை யாடும்போது எளிதில் விழுந்து விடும் என்பது அவர்கள் நம் பிக்கை. இதே நம்பிக்கையால் மெழுகில் எதிரியின் பொம்மை செய்து ஊசி குத்தி நெருப்பில் போடுகிறார்கள். மருமத்தில் அம் பெய்துவது மிகப் பழங்கால மனிதனின் பழக்கம்.

சாவு என்ற சொல் மிகப் பழங்கால வழக்கத்திலிருந்து வந்தது என்பது பலருக்குத் தெரியாது. இதன் பொருளை முதலில் குறிப்பாக உணர்த்தியவர் நல்லூர் ஞானப்பிரகாசர். 'உடம்புக்கு அதிகமாய்விட்டது' என்று சொல்லுகிறோம். 'உடம்பு குன்றிப் போச்சு' என்றும் பேசுகிறோம். 'பயத்தினால் குக்கி விறைத்து' என்ற பேச்சுவழக்கு உள்ளது. இந்தப் பேச்சு வழக்குகளெல்லாம் நேர்ப்பொருளைத் தராது வேறு பொருளையே தருவதைக் கவனிக்க வேண்டும். 'குக்கி' என்றால் உட்கார்ந்து என்பது பொருள். கொங்கு நாட்டில் பேச்சு வழக்கில் இருக் கிறது. விறைத்து என்பது இறந்தவரின் நிலை. இதற்கு நேரி டைப் பொருள் உட்கார்ந்து விறைத்துப் போதல் என்பதாம். இதற்கும் முதுமக்கட்சாடியில் முதுகிழவர்கள் உட்கார்ந்து இறப் பதற்கும் யாதேனும் தொடர்புண்டா ? 'குன்றுதல் என்ற சொல் நேர்ப்பொருள் தராது வேறு பொருள் தருவதுபோல், உடம்பு நுணுகிற்று' என்பதில் 'நுணுகிற்று' வேறு பொருள் தரு கிறது. தொல்காப்பிய உரையில் 'உயிர் போயிற்று, உடம்பு நுணுகிற்று' என்ற வரி காணப்படுகின்றது. உயிர் போவதற்கும் உடம்பு நுணுகுவதற்கும் என்ன தொடர்பு? உயிர் போனால் உடம்பு பெருகுகின்றதேயன்றி, உடம்பு சுருங்குவதில்லையே, என்று சிந்திக்கும்போது உண்மை தெரிந்தது. பழந் தமிழர் உயிர் போனதும் உடலை முதுமக்கட் சாடியில் உட்காரவைத்து உடலைக் குறைத்து வைத்தார்கள். அதாவது உடம்பு நுணுகு கிறது. சாடியில் சுருங்குகிறது குறைகிறது. ஆதலின், உயிர் போனதும் உடம்பு நுணுகிற்று என்று கூறப்பட்டது. உடம்பு நுணுகிற்று என்பதற்கும் 'உள்ளதன் நுணுக்கம்' என்று தொல்காப்பிய சூத்திரம் கூறுவதற்கும் என்ன தொடர்பு? அதை ஆராயுங்கால் சாவு என்ற சொல்லின்பொருள் புரியும்.

"ஒய்தல் ஆய்தல் நிகழ்த்தல் சாஅய்
ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்."

என்று தொல்காப்பிய சூ. 330 கூறுகிறது. சாய் என்பதற்குப்

பொருள் உள்ளதன் நுணுக்கமானால் 'உயிர் போயிற்று உடம்பு சாயிற்று' என்று சொல்லலாம். உடம்பு குன்றி விட்டது என்று தற்போது சொல்வது போலவே, அக்காலத்தில் தலைவியின் உடல் மெலிந்தது என்பதற்குச் 'சாய்' என்ற சொல் பல பாடங்களில் பயின்று வருவதைக் கவனிக்கவும். இறந்தோன் உடலை உட்காரவைத்து உடலைச் சுருக்குவதால் அல்லது நுணுக்குவதால் அதற்குச் சாய்வு என்ற பெயர் வந்தது பின்னர் அது சாவு என்றாயிற்று. முதலில் முதுமக்கட் சாடியில் புதைத்தலைக் குறித்து வழங்கிய சொல் நாளடைவில் இறத்தலைக் குறித்தது. சாவைக் குறிக்கும் மற்றொரு சொல் சாக்காடு. சாக்காடு என்பது சாய்க்காடு என்பதிலிருந்து வந்தது. முதுமக்கட்டாழியில் இறந்தோர் சாய்ந்த (நுணுகிய) காட்டைக் குறித்த இச் சொல் பின்னர் இறப்பையே குறித்தது. முதுமக்கட் சாடியில் சாய்தல் இறத்தலைக் குறித்ததோடன்றி, அந்தச் சாடிகளிருந்த காடே, சாய் என்ற சொல்லுடன் சேர்ந்து இறத்தலைக் குறிப்பது வியப்பைத் தருகின்றது.

இறந்தோர் உடலைத் தீர்க்கும் முறைகள் நான்கு இருந்ததாக மணிமேகலை தெரிவிக்கின்றது.

"சுடுவோ ரிடுவோர் தொடுகுழிப் படுப்போர்
தாழ்வயி னடைப்போர் தாழியிற் கவிப்போர்."

என்பன நான்கு முறைகள். இடுவோர் என்பது தரையில் கிடத்தி விட்டுச் செல்வதைக் குறிக்கும். இறந்தவர் உடல்மேல் இலை முதலியவற்றைப் போட்டு மூடிவிட்டுச் செல்லும் வழக்கம் பாலை நிலத்தில் இருந்ததாகச் சங்க நூல்களில் தெரிகிறது. 'உவலிடு பதுக்கை' என்ற வரியில் 'பதுக்கை' என்பது இப்படி இறந்தோரைப் பதுக்கி வைப்பதையே குறிக்கின்றது. தாழ்வயினடைத்தல் என்பதற்கு, தாழ்ந்த இடத்தில் அடைத்தல் என்று பொருள் கூறப்பட்டுளது. அது பொருத்தமின்று. அப்படிப் பொருள் கொண்டால் தொடுகுழிப்படுத்தலுக்கும் தாழ்வயினடைத்தலுக்கும் வேற்றுமையில்லை. தாழ்வயினடைத்தல் என்பது கல்லறையில் புதைக்கும் வழக்கத்தையே குறிக்கும். தாழ் என்பது தாழ்ப்பாள் போன்ற சொற்களில் பயில்வது போன்ற காப்பு எனும் பொருள் கொண்டது. கல்லறையில் புதைக்கும் வழக்கம் ஒரு காலத்தில் இருந்ததென்பதற்கு, புதுக்கோட்டை மாவட்டத்தில் நிறையச் சான்றுகள் அகப்பட்டுள்ளன. அடுத்துக் கூறப்பட்ட தாழியில் கவிக்கும் முறை மிகப் பழங் காலத்தது. இந்தச் சாடிகள் இருக்குமிடத்தைப் பாண்டக் குழி யென்றும், பாண்டிய வீடு என்றும் இக் காலத்தில் கூறுகின்றனர். மாண்ட

வர் குழியே பாண்டக் குழியாயிற்று என்பர். பாண்டம்+குழி என்பதே பாண்டக்குழி, பாண்டிய வீடு ஆயிற்று என்பது அதை விடப் பொருத்தமானது. இச் சொல் தற்காலத்துப் பெயரென் பதில் ஐயமில்லை. பாண்டுக் குழி யென்று கொண்டு கிழவரின் குழி யென்பாருமுளர். அதுவும் பொருத்தமே. முதுமக்கட் சாடி என்பது அத்துடன் தொடர்புடைத்து. பாண்டி என் ஞெரு விளையாட்டுளது. அதில் ஏழு ஏழு குழிகள் உள்ளது. அவ் விளையாட்டைக் குறிக்கும் 'பாண்டி' எனும் சொல்லுக்கும் பாண்டக் குழிக்கும் தொடர்பிருக்குமோ. இரண்டிலும் குழி யுண்டு. 'பாண்ட' என்ற சொல்லுண்டு. இந்தச் சாடிகள் உள்ள இடத்தைக் குரங்குப் பட்டடை என்கின்றனர். அதற் கொரு புராணக்கதை சொல்கின்றனர். இராமாயணத்தில் வரும் வானரர்கள் கருவிகள் செய்த பட்டறை என்கின்றனர். ஆனல், அதற்கும் முதுமக்கட் சாடிக்கும் பொருத்தமே யில்லை. அதி லிருந்து எழுந்ததுதான், இச் சாடிகள். வாலிருந்த மனிதர்களால் செய்யப்பட்ட தென்பது. பாண்டக் குழி பாண்டவர் குழி யானது நமது மக்களின் புராணப் பைத்தியத்தினலேயாம். குரங்கு+பற்று+அறை என்று ஒருவர் பொருள் கொண்டு குரங்குபோல் பற்றி அடைக்கும் அறை என்றூர். சாடியில் அடைக்கும் வழக்கம் தாழியிற் கவித்தல் என்று சங்க நூல்களில் வழங்குகிறது. குரங்கு என்ற சொற்குப் பொருள் களாகக் கவித்தல், சுருங்கல் என்பன சங்க நூல்களில் வழங்குகிறது. கவித்துச் செல்லும் விலங்கு கவி என்று பெயர் பெற்றதும், அது கபி, 'கபா,' 'ஏப்,' என்று வேற்று மொழிகளில் மாறியதும் கவனிக்க வேண்டும். தாழியில் குரங் கியவரை (கவித்தவரை) அடைக்குமிடம் என்பது குரங்குப் பட்டடைக்குப் பொருளா யிருக்கலாம். (குரங்கு+படு+அடை; குரங்கி கவித்து, படு—இடு) பின்னர் பொருள் புரியாது புரா ணத்தைக் கலந்தனர். உடல் நுணுகிற்று, சாவு என்ப தொடு உடல் குரங்கிப் படுதலை ஒப்பிட்டுப் பார்க்கவும். மூன் றிலும் சுருங்குதல் என்பது அடிப்படைப் பொருள். இறந் தோரை 'பட்டவர்' என்பதும் வழக்கு. குரங்கிப் (சுருங்கி) பட்டவரை அடைக்குமிடம் என்றும் சொல்லலாம். இந்தத் தாழிகளில் ஈட்டி, முதலிய கருவிகளும் வளையல் முதலிய அணி களும் அகப்பட்டதால் குரங்குகள் செய்தவை என்று கருத லானூர்கள்.

"தேவருலக மெய்தின னாதலி னன்றேற்
கவிக்குங் கண்ணகன் ருழி." (புறம், உஉஅ)

"கவிசெந் தாழிக் குவிப்புறத் திருந்த." (புறம், உ௩அ)

"ஈமத்தாழி யகலி தாக வனைமோ." (புறம், உசுச)

"ஓடி மறலி யொளிப்ப முது மக்கட்
சாடி வகுத்த தாரா பதியும்." (விக்கிரம சோழன் உலா.)

"பதுமக் கடவுள் படைப் படையக் காத்த
முது மக்கட் சாடி முதலோன்." (குலோத். உலா.)

"மொய்த்த முதியோர்க்கு முது மக்கட் சாடி பல
வைத்தகுல தீபகனை மன்னுகோ மன்னுகோ."
(திருவெண்காட்டுப் புராணம்.)

சங்கப் பாடல்களில் கவி என்ற சொல் இத் தாழி தொடர்பாகப் பயின்று வருவது, குரங்கு எனபதற்குக் கவி எனும் பொருள் இவ்விடம் கொள்ளலாம் என்பதைக் காட்டுகின்றது.

இம் முறையாகப் புதைக்கும் பழக்கம் குறும்பர், வேடர் என்ற பழங்குடிகளுடையது என்பர். பிற்காலத்தில். அரசர்களும் கொண்டனர் என்பதும், அரசர்களே முதியவர்களுக்குத் தாழிகள் கொடுத்தனர் என்பதும் தெரிகிறது. இறக்கும் தறுவாயிலிருப்போரும் தாழிகளில் வைக்கப்பட்டனர். இவை இராக்கதர்கள் பயன்படுத்தியது, பாண்டவர்கள் பதுங்குவதற்கு வைக்கப்பட்டது முதலிய கதைகள் கற்பனைகளே. இம் முறையில் புதைக்கும் பழக்கம் பழங் கற்காலத்துக்கு முந்தினதென்றும், வரலாற்றுக் காலத்துக்கு மிக முந்தின தென்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இவைகளில் அகப்பட்ட கருவிகளிலிருந்து கி. மு. 3000 ஆண்டுக்கு முற்பட்ட தென்றும், சில கி. மு. 20,000 ஆண்டுகட்கு முன்னும் கொண்டு செல்கின்றன வென்றும் கருதுகின்றனர். கூர்ங்கற்கள் என்று சங்க நூல்களில் வருபவை இப் பழங்காலக் கருவிகள் என்று முன்னர் காட்டினேன். இக் கற்கள் தாழிகள் இருக்குமிடத்தில் வட்டமாகப் பதிக்கப்பட்டிருத்தலையும் தமிழ் நாட்டில் பார்க்கலாம். "தாழிய பெருங் காடெய்திய ஞான்றே" என்ற (புறம் உசுச) வரியிலிருந்து இவைகள் சுடுகாடுபோல தாழிக்காடு என்று வழங்கியதாகத் தெரிகிறது. இதுவே சாய்க்காடு என்றும் வழங்கப்பட்டு, சாக்காடாகி, பின்னர் இறப்பைக் குறித்தது.

பிரெஞ்சு நாட்டில் (Grotte-des-enfantes) என்ற இடத்தில் தோண்டி யெடுத்தபோது ஒன்பது மட்டங்களில் எலும்புக் கூடுகள் அகப்பட்டன. ஆழத்திலிருந்த ஒன்பதாவது மட்டத்தில் ஒரு பெண்ணும் பையனும் புதைபட்டிருந்த முறை புதியதாக இருந்தது. மேல் மட்டங்களில், படுக்க வைத்துப் புதைத்திருந்தனர். ஆனால் ஒன்பதாவதில் மட்டும் உட்கார்ந்த நிலையில் தலையைத் தொங்கவிட்டு உடல் சுருங்கிய நிலையில் புதைக்கப்பட்

டிருந்ததாகத் தெரிகிறது. இந்த முறையில் புதைத்தவர் வேறினமென்று கண்டனர். அவர்கள் நீக்ரோவருடன் தொடர்புடைய குள்ளமான 'கிரிமால்டி' இனமென்று ஆராய்ந்து கண்டனர். இவர்கள் ஒரு காலத்தில் உலக முழுவதும் சுற்றித் திரிந்தனர். இவர்கள் மிக மிகப் பழங் காலத்தில் தோன்றிய இரண்டு அல்லது மூன்று இனங்களில் ஓரினத்தவர் என்றும் தெரிகிறது. இவர்கள் நாம் காளையைக் கும்பிடுவதுபோல், காட்டெருமையைத் தொழுததாகத் தெரிகிறது. இவர்கள் புதைத்த முறை தாழியில் புதைக்கும் முறையோடு ஒத்திருக்கின்றது. நமது முறை மத்தியதரைக் கடல் நாடுகள் முழுவதும் இருந்ததைக் கண்டுபிடித்துள்ளனர். ஒருவேளை கிரிமால்டி இனத்தார் விட்டுச் சென்றதையே குறும்பர், வேடர் கைக்கொண்டனரோ. 'துவாபர யுகத்தின் கடைசியில் தோன்றிய குள்ளர்கள் இந்த முதுமக்கட் சாடியில் புதைத்ததாக செவி வழிச் செய்தி கூறுகிறது.' ஒருவேளை இந்த துவாபர யுகக் குள்ளர் 'கிரிமால்டி' வகுப்பினரோ என்ற கேள்விகள் எழுகின்றன. இதைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்க்கு விட்டு விடுகிறேன். சாவு என்ற சொல் நம்மைப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகட்கு முன் பல்லாயிரம் கல் தொலைவுக்குக் கொண்டு சென்று விட்டது. இப்பொழுது சொல்லுங்கள்! சொல்லும் சொல்லாதோ கதை!!

அணங்கை வாழ்த்துவம்

[பொன்னி, இரா. இளமுருகனார்]

கண்ணிகள்

தெள்ளமுதாம் வள்ளுவர் திருக்குறளும்
　　தெய்வமணங் கமழும் சிலப்பதிகா ரமதும்
கொள்ளைகொளும் கம்பனின் கொழுஞ்சுவையும்
　　கொண்டதமி ழணங்கை வாழ்த்துவம் நன்றே.

பண்டைத்தமிழ் வேந்தர்க்கோர் பாண்டித்துரையைப்
　　பாவலர்தம் வழிக்கோர் பாரதியாரை
திண்டோள கட்டப் பொம்மன்வழி சிதம்பரத்தைத்
　　தெளிந்தளித்த அணங்கை வாழ்த்துவம் நன்றே.

பிட்டுக்கும் பெருமானார் மண்சுமக்கவோர்
　　பெண்குலங் கொண்டவளை வாழ்த்துவம் நன்றே
அட்டியின்றி ஈழம்மலே யாவினையாளும்
　　அருமைத் தமிழணங்கை வாழ்த்துவம் நன்றே.

ஒருவனே தேவன்

[திருவாட்டியார், கோ. பத்மாவதி அம்மையார் பி.ஓ.எல். (ஆனர்சு)]

அகரமே எல்லா மொழிக்கும் முதல்போல்
ஆழிசூழ் உலகுக் காதி பகவன்
பலநூல் படித்தும் பயனில்லை ஏதும்
தூயறி வுடையோன் தாளிணை தொழாரேல்
பிறந்திவ் வுலகில் பெருந்துய ராழ்வார்.
அன்புடன் நினைப்போர் உள்ளமலர் வாழ்வான்
விருப்பும் வெறுப்பும் இல்லா இறையவன்
அழியாத உண்மைப் புகழ் உடையோன்
இடைவிடா தெண்ணி அவனைப் புகழ்வோர்
இருவினைப் பயன் அடையார் என்றும்.
அறமெல்லாம் சேர்ந்தோர் உருவாய் அமைந்தோன்
தனக்கொரு நிகர் இல்லாத் தலைவன்;
ஆசைகள் ஐந்தையும் அவித்த பெரியோன்
அருட்கடல் அன்னோன் நல்வழியிற் செல்வோர்
அழியாமல் இன்ப உலகில் வாழ்வார்.
தத்தம் தொழில்களுக் குதவாத ஐந்து
பொறிகளைப் போல பயனில வாகும்
எண்குணன் அவனை வணங்காத் தலைகள்
அவனியில் ஆழ்ந்து அவனை மறப்பார்
பிறவிக் கடலை நீந்தல் அரிதாம்
உலகை மறந்து அவனை நினைப்பார்
பிறவிக் கடலை நீந்தல் எளிதாம்
அகரமே எல்லா மொழிக்கும் முதல்போல்
ஆழிசூழ் உலகுக் காதிபகவன் ஆம்
ஆழிசூழ் உலகுக் கொருவனே தேவன்.

மேலைநாட்டு மெய்விளக்கம்

[திரு. சு. அன்புமலர், பி. ஏ. (ஆனர்சு)]

(சிலம்பு : ௨௯, பரல் : ௫, ௨௧௦-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிரேக்கநாட்டு மெய்விளக்க ஆராய்ச்சி

பிளேட்டோ (Plato)[1]

சாக்ரடீஸின் அறக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு சினிக் (Cynic), சிரனியாக் (Cyraniac), மாகரிக் (Magaric) என்ற வகைமுறைகள் துவங்கப்பெற்றன என்பதைக் கடந்த இதழில் கண்டோம். ஆனால், அவற்றில் ஒன்றேனும் பல விரிவான கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டு அறச் செயல்கள் அளவிடப்படுகிற பொது முடிவு யாதெனத் தீர்ந்து கூறும் கருத்தாழம் நிறைந்த வகைமுறையாக உருப்பெறவில்லை. இருப்பினும், சாக்ரடீஸால் தோற்றுவிக்கப்பட்ட ஆராய்ச்சியை முழுமையாக்க அத்தகைய முயற்சியில் ஈடுபடுதல் இன்றியமை யாததாக இருந்தது. அவர் சுட்டிக்காட்டிய பிரச்சினைகள் மேலும் ஆழ்ந்து ஆராயப்பட வேண்டியவைகளாக இருந்தன. அவை ஒன்றிற்கொன்று நெருங்கிய தொடர்புடையனவாகவும், வாழ்க்கையின் இறுதிநிலை என்ன என்ற பிரச்சினையோடு தொடர்புடையனவாகவும் இருந்தன. எனவே, அவற்றைப் பெரிய ஆராய்ச்சியின் உறுப்புக்களாகக்கொண்டு அவற்றின் உள்ளுறவுகளைக் கற்றுணராவிடில் அவைகளுக்குத் தகுந்த விடை காணுதல் முடியாதென்பது விளங்கிற்று. மனித வாழ்வு, மனித அறிவு, மனித ஒழுக்கம், மனித நிறுவனங்கள் (human

---

1. பிளேட்டோ கி. மு. 427-இல் நல்ல உயர்குடியில் பிறந்தார். இசை, கவிதை, ஓவியம், மெய்விளக்கம் ஆகியவைகளை இளம் வயதிலேயே கற்றார். கி மு. 407-இல் சாக்ரடீசின் மாணவரானார். கி. மு. 399-ல் சாக்ரடீஸ் இறந்தபின்னர், ஈஜிப்ட் (Egypt), ஆசியா மைனர் (Asia minor), இத்தாலி (Italy) முதலிய நாடுகளைச் சுற்றிவந்தார். ஆதென்ஸ் (Athens) நகரையடுத்த 'அக்கடமஸ்' (Academus) எனுந் தோட்டத்தில், 'அக்கடமி' (Academy) என்ற பெயரால் வழங்கிய ஒரு பள்ளிக்கூடத்தைத் துவங்கினார். கணிதம், மெய்விளக்க ஆராய்ச்சியின் பல்வேறு கிளைகள் ஆகியவற்றைக் கற்பித்துவந்தார். கி. மு. 347-இல் இறந்தார். அவர் மெய்விளக்க அறிஞர் மட்டுமன்று; கவிஞர் (Poet); ஞானி (Mystic); ஒப்பற்ற தருக்க வல்லுநர் (Dialectician). அவரிடத்து மேம்பட்ட பண்புகள் குடியிருந்தன. பிறப்பால் உயர்குடி மகனான பிளேட்டோ எண்ணத்தாலும் உயர்குறிக்கொண்ட அறிஞராகத் திகழ்ந்தார். ஏறத்தாழ அவருடைய நூற்கள் அனைத்துமே அழிவுறாமல் நமக்குக் கிடைத்துள்ளன என்று கருதப்படுகிறது.

institutions) ஆகியவற்றின் ஆக்க நோக்கம் (meaning) என்ன என்ற வினாவிற்கு விடை காணவேண்டுமெனின், இயற்பொருள் அல்லது மெய்ப்பொருளின் (Reality) ஆக்க நோக்கம் (meaning) என்ன என்பதற்கு விடை கண்டாகவேண்டும். ஏனெனின் முதலிற் குறித்த பிரச்சினைகள் இதைச் சார்ந்தனவே ஆகும். இதினின்றும் தனியாக அவற்றிற்கு விளக்கங்கள் பெறுதல் இயலாது. சாக்ரடீஸின் மாணவர்களில் தலைசிறந்து விளங்கிய ஆற்றல் மிக்க பிளேட்டோ இப்பணியை மேற்கொண்டார். அவர் அறிவு விளக்கக் கோட்பாடு (theory of knowledge), ஒழுக்க விளக்கக் கோட்பாடு (theory of condu ct) அரசு விளக்கக் கோட்பாடு (theory of state) முதலியவற்றைத் தனித்தனியாக ஆக்கித் தந்ததோடல்லாமல் சிறந்த அனைத்துலகு விளக்கக் கோட்பாட்டையும் (theory of the universe) அமைத்துத் தந்தார்.

அறிவும் அறமும் செறிந்த வாழ்க்கையில் நின்றொழுகுதற்கு நன்மையைப் (good) பற்றிய அறிவைப் பெற்றிருத்தல் இன்றியமையாதது எனவும், அவ்வறிவைப் பெறுதல் இயலுவதே எனவும் சாக்ரடீஸ் எடுத்துரைத்தார் என்பதை முன்பு கண்டோம். அவர், உரையாடல் முறையால் உண்மை அறிவைக் கண்டுபிடிக்கும் கலையைத் தம் செயற்பழக்கத்திலே கையாண்டு வந்தாரே அன்றி, உண்மையை அடையும் முறையை விளக்கும் கோட்பாட்டை (theory of method) இயற்றவில்லை. பிளேட்டோவும் தம்முடைய நூல்களில் உரையாடல் முறைகளை வெகுவாகப் பயன்படுத்தியுள்ளார். ஆனல் அஃதோடு நின்றுவிடாமல் கையாளப்படுகிற முறையைக் குறித்தும், உண்மையின் தன்மையைக் குறித்தும் மேலும் ஆழ்ந்து சிந்தனை செய்தார். அதன் பயனாக, விவாதமுறையியல் (Dialectics) அல்லது வாய்வியல் (தருக்கவியல் Logic) என்ற விவாதமுறை விளக்கக் கோட்பாட்டையும் (theory of method) வகுத்துத் தந்தார். அதன்கண், பொதுமைக் கருத்துக்களைப் (concepts) படைப்பதும், புணர்ப்பதும் எவ்வாறு, அஃதாவது உண்மையை அடைதற்கு ஆதாரமான விவாத இயக்கங்கள் (logical operations) எவ்வாறு நிகழுகின்றன என்பதை விவரித்துரைக்கிறார். இதிலிருந்து தான் ஒழுங்கான வாய்வியல் (தருக்கவியல் logic) என்ற அறிவு விளக்கக் கோட்பாடு (theory of knowledge) துவங்கப்பெறுகிறது. உண்மையான பொதுமைக் கருத்துக்களையும் (concepts) தீர்ப்புரைகளையும் (Judgements) அடையும் வகையைக் கூறியதோடு பிளேட்டோ மனநிறைவு பெறவில்லை; அவற்றை அறிந்து அனுபவித்து இன்புறவேண்டும் என்பதே அவருடைய

அளவிறந்த ஆவலாகும். இயற்பொருள் அல்லது மெய்ப்பொருளைப் (Reality), பருப்பொருளியல் (Physical), மனவியல் (Mental), ஒழுக்கவியல் (Moral) என்ற அதன் பல தோற்றங்களிலும் உற்றறியவேண்டும்; அஃதாவது இயற்பொருளை அதன் ஒன்றித்த நிறைவான நிலையில் புரிந்துகொள்ளவேண்டும் என்பதே பிளேட்டோவின் குறிக்கோளாகும். உலகின் தன்மையை உய்த்துணராதவரையில் அறிவுப் பிரச்சினையை அலசி ஆராய்வது என்பது இயலாத காரியம் என்பதை அவர் நன்கு அறிந்துகொண்டிருந்தார். எனவே, இதைக் குறியாகக்கொண்டு சாக்ரடீஸின் கற்பித்தல்களுக் கியைந்தவாறு ஒரு அனைத்துலகு வகைமுறையை (Universal system) வகுத்துத்தந்தார். தம் மெய்விளக்க ஆராய்ச்சியை அவர் வாய்வியல் (தருக்கவியல் logic), புலங்கடந்த நுண்பொருளியல் (Metaphysics), ஒழுக்கவியல் (Ethics) என்று வெளிப்படையாகப் பகுக்கவில்லையெனினும், அத்தகைய பாகுபாட்டைப் பின்பற்றியே தம் நூல்களை எழுதியுள்ளார். எனவே, நாமும் அப்பகுப்பைத் தொடர்ந்து அவருடைய ஆராய்ச்சியின் போக்கை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

விவாதமுறையியல் (Dialectics)

அவர் வாழ்ந்த காலத்து, மெய்விளக்க ஆராய்ச்சியில் அறிவுப் பிரச்சினையே முதன்மையான இடம் பெற்றிருந்தது என்பதை அவர் நன்கு உணர்ந்தார். அக்காலத்து நடைபெற்ற ஆராய்ச்சியில் எழுந்த ஐய வினாக்களுககு ஆராய்ச்சியாளர் எத்தகைய விளக்கங்களைத் தந்தார் என்பது, அவ்வாராய்ச்சியாளர் அறிவின் தோற்றுவாயையும் (origin) அதன் தன்மையையும் (nature) குறித்து எத்தகைய கொள்கை உடையவராக இருந்தார் என்பதைப் பொறுத்ததாகவிருந்தது. உதாரணமாக, உண்மையான அறிவைப் பெறுதல் இயலாது என்று சோபிஸ்தர்கள் (Sophists) முடிந்த முடிபாகக் கூறினர் என்பதை முன்பு கண்டோம். புலனுணர்வு (Sense - Perception), தற்கோள் (Opinion) ஆகியவற்றிலிருந்தே நாம் கையாளுகிற வாக்கியங்கள் (Propositions) பிறக்கின்றன என்ற கொள்கையைச் சரியெனக் கொள்வோமாகில் 'உண்மை அறிவைப் பெறமுடியாது' எனும் அவர்களுடைய முடிபும் முழுக்க முழுக்கச் சரியானதே. எவ்வாறெனின், புலனுணர்வு (Sense-Perception) வெறுந் தோற்றத்தை (appearance) நமக்கு விளக்குகிறதே அன்றிப் பொருட்களின் மெய்யியல்பை (true reality) விளக்குவதில்லை. அதே போன்று, தற்கோள் (opinion) மெய்யானதாகவும் இருக்கலாம், பொய்யானதாகவும் இருக்கலாம்; வெறும் தற்கோள் உண்மை அறிவல்ல; தற்கோள் நம்பிக்கையினின்றும் பிறப்ப

தாகும்; அது உண்மையென்று நிலைநிறுத்த முடியாதது. உண்மையான அறிவென்பது பகுத்தறிவு; காரண காரியத் தொடர்பு முறையில் பகுத்துப்பார்க்கின் சரியானதென்று நிலைநிறுத்தமுடிந்ததே மெய்யறிவாகும் எனவே சோபிஸ்தர்களுடைய கொள்கைப்படி பார்க்கும்பொழுது, மக்கள் எண்ணற்ற கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர்; ஆனால், அக்கருத்துக்களை ஏன் கொண்டிருக்கின்றனர் என்பதைத் தெரிந்து கொள்ளாமலும், அக் கருத்துக்களுக்கும், நோக்கங்களுக்கும் ஆதாரமென்ன என்பதைத் தெரிந்துகொள்ளாமலும் அவற்றைக் கொண்டிருக்கின்றனர்.

அறத்தைபற்றிய கொள்கையிலும் இந்நிலைதான். அஃதாவது, அறச்செயல்களும் புலனுணர்வினின்றும் (Sense-Perception), தற்கோளினின்றுமே (opinion) பெருகிவளருகின்றன; மக்கள் எத்துணையோ செயல்களைச் செய்கின்றனர்; ஆனால், எதற்காக அச்செயல்களைச் செய்கின்றனர் என்பதைத் தெரிந்து கொள்ளாமலே செய்கின்றனர்; ஈ, எறும்புகளைப்போலப் பழக்க வழக்கங்களையொட்டி இயல்பூக்கப் போக்கில் (instinctively) செயல்களைச் செய்கின்றனர்; அவர்களுடைய செயல்கள் இன்பமும், துன்பமும் கருதித் தன்னலத்தால் தூண்டப்பட்ட செயல்களாக இருக்கின்றன என்பவையே சோபிஸ்தர்களின் விளக்கமாகும். இங்குத்தான் அவர்களுடைய தவறு வெள்ளிடை மலையென விளங்குகிறது. அவர்கள் தோற்றத்தையும் (appearance) இயற்பொருளையும் (Reality) தாறுமாறாகப் புரிந்து பிரித்துணரமுடியாது மயங்கினர். எனவே புலனுணர்வு (Sense-Perception), தற்கோள் (opinion) ஆகியவை தோற்ற நிலைகளே (appearance) எனவும், அவற்றில் நீங்கிய உண்மையறிவே மெய்ப்பொருள் (Reality) எனவும் விளக்கிக்காட்டி, அம்மெய்யறிவை அடையும் வகையையும் வகுத்துத்தந்தவர் பிளேட்டோவே யாவர். (தொடரும்)

திருக்குறள் தண்டபாணி விருத்தியுரை

(சிலம்பு: உக, பரல் ®: , உ0சு-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக்கருத்தானே,

> 'கல்வி கரையில கற்பவர் நாள்சில
> மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதி
> னாராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
> பாலுண் குருகிற் றெரிந்து.' (நாலடி - கநரு)

என்றார் பிறருமென்பது. கசடறக் கற்றலாவது, ஐயமும் மயக்கமுந் தீரக் கற்றல். கற்றதற்குத் தக நிற்றலாவது, அந் நூல்கள் கூறிய நெறியானே அறஞ்செய்து பொருளீட்டி இன்பந் துய்த்து வீடுபெற நிற்றல். இக்கருத்தானே பிற்காலத் தௌவைப்பிராட்டியாரும், 'வீடுபெற நில்' என்பாராயினர். ஆசிரியர் நூன்முகத்தே 'கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ—னற்றா டொழாஅ ரெனின்,' (உ) என்றதும் இது நோக்கிற்று.

கற்கத் தக்கனவற்றைக் கற்கவென்ற திது. (க)

கற்கத் தக்கனவற்றுள் இன்றியமையாதன கூறுவது வருங் குறள் :

நகூஉ. எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.

(இ - ள்.) (அறியாதார்) எண் என்ப - தருக்கம் என்று சொல்லுவனவும், ஏனை எழுத்து என்ப - அதனின் வேறாகிய இலக்கணம் என்று சொல்லுவனவும், இவ்விரண்டும் - ஆகிய இவை இரண்டனையும், வாழும் உயிர்க்கு - (பயன் கருதி) வாழும் (சிறப்புடைய மக்கள்) உயிர்க்கு, கண் என்ப - கண் என்று சொல்லுவர் (அறிவுடையோர்) (எ - று.)

(இ - து.) தருக்கமும் இலக்கணமும் மக்களுயிர்க்கு இரு கண்போலும் என்பர் அறிவுடையோர் (எ - ம்.)

நூலாவது அதனை இயற்றினார் கருத்தை வெளிப்படுக்கும் சொற்றொகுதி யன்றே. ஆகவே கருத்துஞ் சொல்லும் முறைப் பட அமைந்தாலன்றி நூல் செவ்விதின் அமைவதுமில்லை, பயன் கொள்ளப்படுவதுமில்லை. ஆதலான் நூலை இயற்றுதற்கும் இயற்றிய நூலை அறிதற்கும் கருத்தின் அமைதி ஆமாறும் சொல்லின் அமைதி ஆமாறும் இன்றியமையாது அறியற்பாலன

வாம். எனவே நூற்பொரு ளுணர்தற்கு அவையிரண்டும் கருவி யாதல் பெறப்படும். கருத்தின் அமைதி ஆமாறு தருக்கம் எனவும் சொல்லின் அமைதி ஆமாறு இலக்கணம் எனவும் வழங் கப்படும். கருத்தாவது எண்ணமாதலின் தருக்கம் எண் எனவும், சொல்லாவது எழுத்தாதலின் இலக்கணம் எனவும் கூறப்படும். தருக்கம், எண், அளவை, ஏரணம் என்பன ஒரு பொருட் கிளவி. எழுத்து இலக்கணம் என்பன ஒருபொருட் கிளவி. எண்ணு மெழுத்தும் தருக்கமும் இலக்கணமு மாதலே 'ஏரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்' (திருக்கோவையார் - நூற்சிறப்பு) என்புழியுங் காண்க. எண் ணென்பது கணிதம் என்றார் ஆசிரியர் பரிமேலழகர். தருக்கம் கணித நூலுக்கு உறுப்பாமாதலின் அஃதொக்கும். உலகத்துப் பொருள்களைக் காண்டற்குக் கண் கருவியாதல்போல, நூற் பொருள்களை அறிதற்குத் தருக்கமும் இலக்கணமும் கருவியாத லின் அவை கண் எனப்பட்டன. எனவே, இவை கூறும் நூல் களும் ஏனை நூலுணர்ச்சிக்குக் கருவி நூல்களாயின. வாழும் உயிர்க்கு என்றது பயன் கருதி வாழும் உயிர்க்கு என்றவாறு. பிறந்தவாறும் வாழுமாறு மறியாது பசித்தாலுண்டு, களைத்தா லுறங்கி, தளர்ந்தால் இறக்கும் விலங்கினங்களும் அவற்றோ டொத்த ஒருசார் மானுடங்களும் போலாது, நிலையான இன் பத்தை யடைதலே வாழ்க்கையின் பயன் என்றுணர்ந்து அப் பயனிற் கண்வைத்து அறம் பொரு ளின்பங்களை ஆய்ந்து கொள்ளும் சிறப்புடைய மக்களைச் சுட்டி, அவர்க்கே இவை கண்போல் சிறக்கும் என்பார், 'வாழு முயிர்க்கு' என்றார். அவர் கருதும் பயன் பிற நூலுணர்ச்சிக்குக் கருவி மாத்திரையா யுள்ள இவற்றாற் பெறுமா றெங்ஙனமோ வெனின், நிலையான இன்பம், நிலையாததும் துன்பக் கொள்கலமுமான மக்களுடம்பு கருவியாகப் பெறப்படுமாறு போலப் பெறப்படுமென்க. கருவி யாதலின் உடம்பு சிறந்தாற்போல இவையுஞ் சிறக்குமெனவுங் கொள்க. இதுபற்றி யன்றே,

"ஆதி முதலொழிய வல்லா தனவெண்ணி
னீதி வழுவா நிலைமையவான்—மாதே
யறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின்
றிறமாமோ வெண்ணிறந்தாற் செப்பு."

"எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்."

என்னும் பாக்கள் எழுவவாயின என்பது. என்ப என்றவற்றுள்

முன்னைய இரண்டும் எனப்படுவன என அஃறிணைப் பன்மை வினையாலணையும் பெயரும், பின்னையது என்பர் என உயர் திணைப் பன்மை வினைமுற்றுமாம்.

எண்ணு மெழுத்துங் கண்ணு மென்ற திது. (உ)

அவை கற்றோரே கண்ணுடையார் என்பது வருங் குறள்

ருகூரு. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

(இ - ள்.) கற்றோர் - (கருவி நூல்களைக் கற்று அவை கருவியாக ஏனை நூல்களுள் கற்பவற்றைக்) கற்றவரே, கண்ணுடையர் என்பவர் - கண்ணுடையவர் என்று சொல்லத் தக்கவர்; கல்லாதவர் - (கருவி நூல்களையும் அவை கருவியாகக் கற்கப்படுபவற்றையும்) கல்லாதவர், (கண்ணுடையவரே யாயினும்) முகத்து - (தம்) முகத்தில், இரண்டு புண்ணுடையர் - இரண்டு புண்ணுடையவரே (யன்றி இரண்டு கண்ணுடையவராகக் கருதப்படார்.) (எ - று.)

(இ - து.) கற்றவர் கண்ணே கண்; ஏனையார் கண் புண் போலும். (எ - ம்)

காண்டற்குக் கருவி கண்; காண்டலில்லையேற் கண்ணிருந்துங் குருடரே. அங்ஙனமே கருவிநூல் கற்றவழியும் கற்பவை கல்லார் கல்லாதவரே யாவர். ஆதலின் பொதுப்படக் 'கற்றோர்' என்றார். ஊனக் கண்போலக் காலத்தானும் இடத்தானும் வரையறைப்படாதது ஞானக்கண்ணாதலின், கல்வியாலது பெற்றாரைக் 'கண்ணுடையார்' என்று சிறப்பித்தார். ஊனுவதெல்லாம் புண்ணாதலின் (குறள் - உருஎ) ஊனக்கண்ணன்றி ஞானக் கண் இல்லாதார் 'புண்ணுடையர்' எனப்பட்டார்.

கற்றார் சிறப்புங் கல்லாதார் இழிவுங் கூறியதிக் குறள். (ரு)

கற்றார் தன்மை கூறுவது வருங் குறள் :

ருகூச. உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்.

(இ - ள்.) (யாவரையும்) உவப்ப - (அவர்) மகிழுமாறு, தலைக்கூடி - சந்தித்து, உள்ள - (இனி இவரை யாம் சந்திக்கக் கிடைக்குமோ என அவர்) நினைக்குமாறு, பிரிதல் - (அவரை) நீங்குதலாகிய, அனைத்து - அத்தன்மைத்து, புலவர் தொழில் - கற்றறிந்தாரது தொழில். (எ - று.)

(இ - து.) தமது கூட்டுறவைப் பலரும் விரும்பி வேண்டத் தக்க தன்மையுடையோர் கற்றோர். (எ - ம்.)

தம்மைச் சந்தித்தவர் என்ஞான்றும் அச் சந்திப்பை உவகையோடு உள்ளவைத்துப் பிரிதல் எனினும் அமையும். உரையும் ஒழுக்கமும் தொழிலா யடங்கும். நன்னெறி ஒழுகிக் காட்டுதலும், இனிமையும் பயனுமுடையன சொல்லுதலும் கற்றோர் செயற்பால. அவை செய்தவழிப் பலரும் அவர் நட்பை விரும்பி அவர்பால் அன்புடையராவர் என்பதாம்.

கற்றோர் தன்மை கூறியதிது. (ச)

கற்றோர் உயர்வும் மற்றோர் தாழ்வுங் கூறுவது வருங் குறள் :

நடகூரு. உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

(இ - ள்.) உடையார்முன் - செல்வ ரெதிரே, இல்லார் போல் - வறியர் (நிற்குமாறு) போல, ஏக்கற்றும் - (கல்வியி னசையால் ஆசிரியர் எதிரே) தாழ்ந்துநின்றும், கற்றார்-கற்றுப் புலமை எய்தினோர் (தலையாயினார்); கல்லாதவர் - கல்வி யில்லா தவர் (செல்வ முதலியவற்றால் உயர்ந்து எவர் முன்னுந் தாழ்ந்து நின்றறியாதவ ராயினும்), கடையரே - (என்ஞான்றுந்) தாழ்ந் தவரே. (எ - று.)

(இ - து.) ஆசிரியர்முன் தாழ்ந்து நின்று கற்றோர் உயர்ந் தவராவர் ; கல்லாதவர் தாழ்ந்தவ ராவர். (எ - ம்.)

ஏக்கறுதல் - தாழ்ந்து நிற்றல். கல்லாதவர் கடையர் எனவே அதன் மறுதலையாய கற்றார் தலையாயார் என்பது தானே போதரும். ஆதலின், கற்றாராமாறு பெறுவித்தற்கு இன்றியமையாத சொற்களைக் கூறி எஞ்சிய தலையாயார் என்பது இசையெச்சமாக்கினர். எனவே, கற்றுப் புலமை நிரம்புதற்கு ஆசிரிய வழிபாடு இன்றியமையாததென்பதும், குரவனை வழி படக் கூசிக் கல்லா தொழிந்தவர் பின்னர்ப் பலர் முன்னுங் கூசித் தாழ்ந்து நிற்பரென்பதும் பெறப்படும்.

'வருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாந்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ்த் தான்.'

என்ற பிற்காலச் செய்யுளும் ஈண்டு நோக்கற்பாலது.

கற்றார் உயர்வுங் கல்லார் தாழ்வுங் கூறியதிது. (ரு)

கல்வியின் சிறப்புக் கூறுவன வரும் ஐந்து குறள்கள் :

௩௯௬. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

(இ - ள்.) மணற்கேணி - மணலின்கட் கேணி, தொட்டனைத்து - தோண்டிய அளவாக, ஊறும் - சுரக்கும்; (அது போல) மாந்தர்க்கு - மக்களுக்கு, அறிவு-, கற்றனைத்து - கற்ற அளவாக, ஊறும் - சுரக்கும். (எ - று.)

(இ - து.) தோண்டிய அளவாகக் கிணற்றில் நீர் சுரப்பது போலக் கற்ற அளவாக மக்களுக்கு அறிவு சுரக்கும். (எ - ம்.)

கேணி - சிறுகுளம். இது திசைச்சொல். ஈண்டுத் தன் கணுள்ள நீரை யுணர்த்தி இடவாகுபெயராய் நின்றது. சிறிது தோண்டிப் பின்னர் விடின் நீர் சுரவாததோடு தோண்டிய உழைப்பும் வீணாதல்போலச் சிறிது கற்றுப் பின்னர் அதனை யொழியின் அறிவு சுரத்தலின்றாதலோடு கற்ற கல்வியும் பயனில தாம் என்பதாயிற்று. எனவே மேன்மேற் கற்றல் வேண்டு மென்பதாம். அங்ஙனங் கற்றவழி அறிவு பெருகுமென்பது. இஃது ஊழ் மாறுகொள்ளா வழியாதலின் மேல் 'உண்மை யறிவே மிகும்' (குறள் - ௩௭௩) என்றதனோடு மலையாமை யறிக.

கல்வி இருமைக்கு மாவதாகிய அறிவுபயக்கு மென்றது. (௬)

இம்மை பயக்குமாறு கூறுவது வருங் குறள் :

௩௯௭. யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

(இ - ள்.) (கற்றவனுக்குத் தன் நாடும் தன் ஊருமே யன்றி) யாதானும் நாடாம் ஊராம் - யாதாயினுமொரு நாடும் நாடாம், யாதாயினுமோர் ஊரும் ஊராம்; (இங்ஙனமாகவும்) ஒருவன் சாந்துணையும் - ஒருவன் தான் இறக்குமளவும், கல்லாதவாறு - கல்லாமற் கழிகின்றது, என் - என்ன கருதி! (அஃதொரு வியப்பாகின்றது) (எ - று.)

(இ - து.) சென்ற விடமெல்லாம் சிறப்பைத் தருவது கல்வியாகவும், அதனை ஒருவன் கல்லாது காலங்கழித்தல் அறிவீனம். (எ - ம்.)

ஆல் இரண்டும் அசைநிலை. பிறவிடமும் தம்மிடம் போலு மென்றது, யாண்டும் சீரும் சிறப்பும் உண்டா மென்றவாறு. கற்கக் கற்க அறிவு மிகுமாதலின், சாந்துணையுங் கற்றல் வேண்டு மென்பதாயிற்று. செத்த பின்னும் உயிர்க்குத் துணையாவது கல்வியென்பது மேற் கூறுகின்றாராதலின் அது நோக்கிச் 'சாந்துணையும்' என்றார் எனலுமாம்.

கல்வியின் இம்மைப் பயன் கூறியது இது. (எ)

மறுமைப் பயன் கூறுவது வருங் குறள் :

௩௯௮. ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, ஒருமைக்கண் - ஒரு பிறப்பின்கண், தான் கற்ற கல்வி-, எழுமையும் - எழு பிறப் பினும், ஏமாப்பு - (சென்று) துணையாதலை, உடைத்து - உடை யது. (எ - று.)

(இ - து.) ஒருவன் ஒரு பிறப்பிற் கற்ற கல்வி அவனுக்கு எழுபிறப்பிலும் துணையாம். (எ - ம்.)

ஒருவன் செய்த அறம் அவன் உயிரொடு சென்று பிறவி தோறும் அவனுக்குத் துணையாதல்போலக் கல்வியுந் துணையா மென்றவாறு.

எனவே, கல்வி அறத்தோ டொப்ப தென்றதிது. (அ)

கல்வி இன்பமா மென்பது வருங் குறள் :

௩௯௯. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

(இ - ள்.) கற்றறிந்தோர் - கற்றுப் புலவராயினோர், தாம் இன்புறுவது - தாம் இன்புறுதற் கேதுவாகிய கல்விக்கு, உலகு இன்புற - உலகம் இன்புறுதலால், கண்டு - (அச்சிறப்பு) நோக்கி, காமுறுவர் - (பின்னும் அக் கல்வியைக் கற்றலையே) விரும்புவர். (எ - று.)

(இ - து.) கற்றோர் தமக்கே யன்றிப் பிறர்க்குந் தங் கல்வி யின்பமாதல நோக்கி மேலும்மேலுங் கற்றலையே விரும் புவர். (எ - ம்.)

தாமின்புறுதலாவது கற்குங்காலைத் தாம் சொல்லின்பமும் பொருளின்பமும் நுகர்தலேயன்றிப் புகழும் பொருளும் எய்தி இன்புறலும் மேல் அது பிறவித்துணையாகித் தரும் வீடுபெற்று

இன்புறலுமாகி இன்பம் தமக்கு இடையறாதாதல். இங்ஙனம் கல்வி இன்பமும் பயனும் ஒருங்களித்தல் கரும்பு தின்னக் கைக்கூலி போல்வதாம். உலகின்புறுதல் 'உவப்பத் தலைக்கூடு' லான். (குறள் - ௩௯௪).

கல்வி இன்பமாதல் கூறிய திது. (௯)

பொருளுமாதல் கூறுவது வருங் குறள் :

௪௦௦. கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, கேடில் - அழிவில்லாத, விழுச்செல்வம் - சிறந்த செல்வமாவது, கல்வி-கல்வியாம்; மற்றையவை - அஃதொழிந்த பொன்னும் மணியும் முதலாயின, மாடல்ல - செல்வமல்ல. (எ - று.)

(இ - து.) ஒருவனுக்கு அழியாத செல்வமாவது கல்வியே; பிறவல்ல. (எ - ம்.)

கேடில்லாமையாவது, வலியரால் கொள்ளப்படாமையும் செலவிற் குறையாமையும். விழுப்பமாவது தானும் சிறப்புற்றுத் தன்னைப் பெற்றாரையுஞ் சிறப்பித்தல். இவை யிரண்டும் மணி பொன் முதலாயினவற்றுக் கின்மையின் அவை மாடல்ல வாயின. கல்வி கேடில் விழுச்செல்வ மாதலை, 'இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற்—றம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றால்' 'வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை—மிக்க சிறப்பி னரசர் செறின் வவ்வார்' என வரும் (௧௩௩, ௧௩௪) நாலடிப் பாட்டுக்களான் அறிக பொருட் சிறப்புப் போற்றப்படுவதாயினும் கல்வியை நோக்கச் சிறப்பில தாதலின் 'மாடல்ல' என்றார்.

இவை யைந்து பாட்டானும் கல்வியது சிறப்புக் கூறப் பட்டது.

இவ்வதிகாரத்தில், முதற் குறளால் கற்கப்படுவன கற்குமாறு மவை கற்றற் பயனும், அடுத்த குறளால் கற்கப்படுவன வற்றுள் இன்றியமையாதனவும், அடுத்த குறளால் கற்றார் சிறப்பும் கல்லா ரிழிவும், அடுத்த குறளால் கல்வியிற் சிறந்தார் தன்மையும், அடுத்த குறளால் அவர் உயர்வும் ஏனையார் தாழ்வும், இறுதி ஐந்து குறள்களாற் கல்வியின் சிறப்பும் கூறப் பட்டன. (தொடரும்)

குளவியும் தேனீயும்*

[கோபாலை திரு. வே. பெருமாள்]

அன்பீர்! நண்பீர்! அனைவருங் கேண்மின்
தன்னே ரில்லாத் தேனீ யொன்றைக்
குரலுடைக் குளவி வரவுகாண் டலும், "என்
மரபிற் றோன்றிய மாண்புறு உறவினாய்
நின்போல் யானும் என்னோ மக்களால்
நன்னீர் மையனென்று நச்சப் படாமல்
கண்டதும் வெறுத்துக் கொலைசெயப் பார்க்கிறேன்
பண்பிலே னென்னப் பகரவும் படுகிறேன்
ஒளிதிகழ் முதுகுடன் ஒண்மாண் எழிலும்
களிகொடு பொன்னிறங் காட்டும் செய மேனியும்
உடையனா யிருந்தும் உலகினர் இவ்விதம்
படைபோ லெதிர்க்கப் பார்க்கின் றனரால்
நண்ப! இதனை நவில்வாய் எதனால்
என்னினும் நீபண் புளனெனப் பகர்வது"
"உறவின் மிக்க வுயரெழில் நண்ப!
உற்றவற் றையே உரைத்தா யெனினும்
நின்போ லதிக நிந்தைகள் நிகழ்த்தாது
பன்னலம் பயக்கும் பயனுடைத் தேனை
விரும்பியே என்னை விழைகின் றனரால்;
மறுவறு ஒளிகள் மிளிரும் நின்னை
எழிலால் விரும்புவர் எனினும் கொட்டும்
பழிச்செயல் தானினைப் பயனில தாக்குமால்;
பிழைமலி எழிலைப் படைத்த என்னை
விழைவ தென்றன் கொடுமை யின்மையும்
சுறுசுறுப் புடைமையும், தேன்தரு தன்மையும்
மறுவறு மக்களால் மதிக்க வைக்குமால்"
என்றே புகன்றீ யேகிய தன்றே.
எத்துணை எழில்கள் ஏற்றிருப் பினுமவர்
பித்துறு செயல்கள் புரிவதென் பெரிதே.

கதைச் சுருக்கம் :- குளவி யொன்று தேனீயைக் கண்டது. 'நண்ப! நான் உன்னைவிட எவ்வளவோ அழகு பெற்றிருக்கிறேன்; மக்கள் உன்னை விரும்பும் அளவுகூட என்னை விரும்பவில்லையே; காரணம் என்னையோ?'

---

* புலவர் Anon எழுதிய "Awasp and ABee" என்னும் ஆங்கில நூல் மொழி பெயர்ப்பு.

அறுபதாம் ஆண்டுநிறை அணிவிழா வாழ்த்து*

[பெருநாவலர் திரு. பு. சி. புன்னைவனநாத முதலியார்]

சொல்மேவும் வேணுவன நாதன்அடித்
துணைப்போதைப் போதும் போற்றும்
அல்மேவும் அறற்கூந்தல் அறம்வளர்த்த
வடிவாள்நம் அன்னை முன்னாம்
பல்மேவும் முகச்சித்தி விநாயகனை
அளித்தாள்அப் பகவன் தன்உள்
இல்மேவும் தெய்வம்என வழிபடுசீர்
எழில்சுப்ர மணிய வேளே !

மேவுமுயர் வானம்என விளங்குமணி
மாளிகைநன் கமைத்தாய் வண்ணப்
பாவுரைசெய் புலவர்வறி ஞர்வறுமைப்
பாடறிந்துள் உவப்ப ஈவாய்
காவுடன்நீர்க் குழாய்காந்தி உருவகுத்தாய்
கருதுகுடி அரசு நாளில்
மேவுதிருப் பணிப்பிள்ளை யார்உருவம்
எழுந்தருளு வித்தாய் நன்றே.

நன்றெண்ணும் மதியுடையாய் நாவலர்சொற்
பொருளுணர்வாய் நாளும் அல்லோர்
அன்றெண்ணும் பரம்பொருளை ஆம்என்னும்
படிசெய்யும் அருளே பூண்டாய்
குன்றென்னும் குணமுடையாய் கோதறுநல்
உளம்படைத்த கோவே வேலை
அன்றன்று செய்தொழிலர் ஆர்வமுற
மகிழ்விக்கும் அன்பால் மிக்கோய்.

---

* திருநெல்வேலி ஆயத்த அணிகல அங்காடி அதிபரும், சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத் தலைவரும் ஆன உயர்திரு. மு. சுப்பிரமணியன் செட்டியார் அவர்களுக்கு 26-1-1955-இல் நடைபெற்ற 60-ஆம் ஆண்டு நிறை அணிவிழாவின்போது வாழ்த்திப் பாடிய பாடல்கள்.

ஆர்கலிசூழ் புவியினிடை ஆறுபத்
தாண்டுநிறை அணிவி ழாக்கள்
பேர்பெறவே செய்தவர்நற் பெற்றியுணர்ந்
துள்ளோம்நற் சமயச் சார்பில்
சீர்பெறநல் அறிஞர்துணை யாற்கும்ப
வழிபாடு வேள்வி செய்தோர்
பார்புகழ மூவிருப தாண்டுநிறை
மணிவிழாக்கொண் மணியே காணும்.

கொண்டல்நிகர் கொடைவளத்தாய்! கோதறுநற்
றமிழ்வளர்க்குங் கொள்கை கொண்டாய்
தண்டமிழ்ச்சங் கத்தலைவ தமிழ்ச்சங்கம்
சைவசித் தாந்த சங்கம்
எண்டகவே போற்றுதலால் இரவிமதி
யுள்ளவரை இல்வாழ்க் கைச்சீர்ப்
பெண்டகவார் சிவகாம சுந்தரியோ
டினிதூழி பிறங்க வாழி.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) குசராத்தியில் தாய்மொழிக்கு முதலிடம்

கடந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் குசராத்தி பல்கலைக் கழகத்தார், கல்லூரி முதல் வகுப்பில் கலை, விஞ்ஞானம் முதலிய பாடத்தேர்வுகளைக் குசராத்தி மொழியிலேயே நடத்துவதென்றும், பாடங்களைக் கற்பிக்கும் மொழியும் குசராத்தி மொழியாகவே யிருத்தல் வேண்டுமென்றும் முடிவு செய்திருந்தனர். பல்கலைக் கழகத்தாரின் இந்த முடிபுக்குப் பம்பாய் கவர்னர், அப் பல்கலைக்கழக வேந்தர் என்ற முறையிலே தமது ஒப்புதலை அளித்து விட்டார்.

மேல் வகுப்புகளில் குசராத்தி மொழியிலேயே கல்வி கற்பிக்கவும் அப் பல்கலைக்கழகம் முடிவு செய்திருக்கிறது; இத்திட்டம் விரைவில் செயல் முறைக்கு வருமெனத் தெரிகிறது.

குறிப்பு: குசராத்தி பல்கலைக் கழகத்தாரின் முடிபும், அதற்கு ஆட்சியாளர் காட்டி வரும் நன்மதிப்பும், பண்பும் பயனும் உடைத்தா யிருத்தல் பாராட்டத் தக்கது. தாய்மொழி மூலம் கல்வி கற்பித்தல் வேண்டும் எனத் தமிழகம் நெடு நாட்களாகக் கேட்டு வந்தும் சென்னை ஆட்சியாளர் இன்னும் செயல் மறந்திருப்பது ஏனோ தெரியவில்லை!

(உ) நம் கல்வியமைச்சரின் தாய் மொழிப்பற்று :

சென்ற 18-2-55 இல் நடைபெற்ற தமிழ்வளர்ச்சிக் கழகப் பரிசளிப்பு விழாவில் பேசிய சென்னை மாநிலக் கல்வி அமைச்சரவர்கள், தமிழகத்தார் உள்ளம் குளிரும் வகையிலே, 'கல்லூரிகளில் தமிழே பயிற்சி மொழியாகவேண்டும்; கல்லூரிகள் இப்பணியை மேற் கொள்ளாவிட்டால் அரசியலார் தலையிட்டு அதனை வற்புறுத்த நேரிடும்' எனப் பேசியுள்ளார்.

குறிப்பு: அமைச்சரின் ஆர்வத்தையும் துணிவையும் கண்டு கழிபேருவகையடைகிறோம். ஆனால், இவ்வளவு நாட்கள் கழித்து, கழகத்தின் உள்ளக்கிடக்கை அறிந்திருந்தும், தமிழை ஆட்சிப்பீட மேற்றும் ஆணையைக் கையகத்தே வைத்துக் கொண்டு, சட்டத்தின் துணைக்கொண்டு அதனைச் செயற்படுத்தாமல் ஆட்சியாளர்கள் வாளா விருப்பது தாயகத்துக்கு நலஞ் செய்வதாகாது.

(௩) டாக்டர் உ. வே. சாமிநாதையரின் நூற்றாண்டு விழா :

தமிழ் மொழிக்கு ஆக்கஞ் செய்த பெரியார் பலராவர். அவருள் அண்மையில் மறைந்த தமிழ்ப் பெரியார் உ. வே. சாமிநாதையரவர் களும் ஒருவராவர். அன்னாரின் நூற்றாண்டு விழா 18, 19, 20-2-55ஆம் நாட்களில் சென்னையில் பல்லிடங்களில் நிகழ்வுற்றன. அறிஞர் பலர் ஐயரவர்களின் தொண்டினைப் பாராட்டிப் பேசினர். சங்ககாலச் சுவடிகளை அச்சுக்குக் கொணர்ந்து நாட்டுக்குதவிய அவர்தம தொண் டினை நாடு என்றும் பாராட்டற்குரியது. தமிழ்ப் புலவர்களைக்கொண் டாடி விழாவெடுக்கும் இந்நற்காலம் பெருகுவதாக.

(௪) மிகப்பெரிய திமிங்கில மீன் :

தரங்கம் பாடிக்கு அருகே புதுப்பேட்டை என்னும் செம்படவச் சேரியின் பக்கத்தில் கடற்கரை ஓரமாக நூறடி நீளமும் ஐந்தடி அகலமும் மூன்றடி உயரமுமுள்ள திமிங்கில மீன் ஒன்று 27-2-55 ஆம் நாளன்று அலைகளால் ஒதுக்கப் பெற்றது. திமிங்கிலத்தின் விலா எலும்பின் நீளம் இருபது அடியும் உயரம் ஒன்றரை அடியும் அகலம் முக்கால் அடி அளவும் உள்ளன.

திமிங்கிலம் அழுகிய நிலையில் இருப்பதாகவும் தரங்கம் பாடிக் கடற்கரை யருகில் அதை வைக்கப்பட்டிருப்பதாகவும் மீன் இலாகா அதை ஏற்றுக்கொண்டிருப்பதாகவும் செய்தித் தாள்களின் வழி அறிகின்றோம்.

(௫) திருப்பேரூர் சாந்தலிங்க அடிகளார் குருபூசை விழா :

நாளது சய ஆண்டு மாசித்திங்கள் 21, 22, 23 நாட்களில் (5, 6, 7—3—55) சனி, ஞாயிறு, திங்கட்கிழமைகளில் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் குருபூசை விழாவும், அதனையொட்டி, தமிழ்க் கல்லூரி, பள்ளி விழாக்களும் நடைபெற்றன.

7—3—55 திங்களன்று முற்பகல் குருபூசை விழா வழிபாடுகளும், இரவு சாந்தலிங்கப்பெருமான் திருவீதியுலாவும் நடைபெற்றது. அறிஞர்கள் பலர் அவ்வப்போது தலைமை பூண்டும் சொற்பொழி வாற்றியும் சிறப்பித்தனர்.

மதிப்புரை

(க) துகளறு போதம்

[ஆசிரியர்: சீகாழிச் சிற்றம்பலநாடிகள்; உரையாசிரியர்: அச்சுவேலியூர் ஈசான சிவன்; பதிப்பாளர்: இரத்தினம் பிள்ளை, திக்கம் வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம், இலங்கை; பக்கம்: 50; விலை அணா 14.]

இந் நூல் சீகாழிச் சிற்றம்பல நாடிகள் திருவாய் மலர்ந்தருளியது. சித்தாந்த நுண் பொருள்களைச் செம்மையாக மலைவறத் தெளிவிப்பது. முப்பது பிரிவுகளாகப் பகுத்து முப் பொருள் உண்மை விளக்கமுறச் செப்புவது. ஒரு நூறு வெண்பாக்களை உடையது. வெண்பாக்கள் எளிமையும் இனிமையும் ஆற்றொழுக்கும் கொண்டு திகழ்வன. இந் நூலின் பொருளுண்மை விரிவு, திருச்சிற்றம்பலக் கோவையார் என உரையாசிரியர் உய்த்துணர்ந்து விளக்குவது சாலப் பொருத்தமேயாம்.

இந் நூற்கு அமைந்த சீரிய உரை சித்தாந்தப் பொன் திறவுகோலெனப் புகலின் பொய்யாகாது. உரை திட்ப நுட்பம் செறிந்து, சித்தாந்த உண்மை பொதுளுவது. வேண்டும் இலக்கணம் குறைவின்றிக் காண்பது. பல மலைவுகளையு முற்றும் ஒழிப்பது. உரையாசிரியர் இலக்கண, இலக்கிய, சித்தாந்த, செந்நெறி யொழுக்க மேம்பாடமைந்த சீரிய சான்றோராவர். ஈசானசிவனார் என்னும் சிவதீக்கைப் பேறுடையார். திக்கம் செல்லையா என வழங்கும் சிறப்பினர். நுண் மாண் புலமையர். யாழ்ப்பாணத்துத் தொன்மைசேர் வேளாண் விழுத்திணையர்.

இந் நூலினைப் பொதுவாகத் தத்துவ நூலாய்வாரும் சிறப்பாகச் சித்தாந்த சைவர்களும் வாங்கியும் வாங்குவித்தும் ஓம்புவார்களாக. அதன் வாயிலாக உரையாசிரியரவர்கள் எழுதிவைத்துள்ள இது போன்ற சித்தாந்த நுணுக்கங்களை அவர் தம்மகனுரை வெளியிடஊக்குவிப்பார்களாக.

(உ) திருக்குறள் அறத்துப்பால் துறவறம்

[ஆசிரியர்: மயிலை, சிவ. முத்து; வெளியீட்டாளர்: மாணவர் மன்றம், 17. இரத்தின முதலி தெரு, சென்னை-1; பக்கம்: 68; விலை அணா 6.]

இந் நூல் மறைந்த மாணிக்கம் தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்கள் நினைவாக அமைந்தது. உரையாசிரியர் மயிலை. சிவ முத்து அவர்களாவர். சென்னை மாணவர் மன்றத்தார் வெளியீடு. இனிய எளிய உரை என்னும் பெயருக்கேற்பச் சிறந்தது. எல்லாரும் கற்றுப் பயனெய்தற்கேற்றது. அன்பர்கள் வாங்கிப் போற்றுவார்களாக.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.